லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-5 இதழ்-12 மே-2017 மாத இதழ் விலை ₹ 10/- makkalvisaranai@facebook twitter

# கோபக்கார தமிழன்




பரபரப்பான விற்பனையில்
காலப்பிழை
உணர்வியல் கவிதைகள்
ஆ.மவுரியன்

சிறப்புத் தலையங்கம்

எத்தனை நாளைக்கு இந்த

# நீலிக் கண்ணீர்!



பருவ மழை பொய்த்த துயரம் ஒருபுறம், கர்நாடகாவிலிருந்து வர வேண்டிய காவிரி நீர் வராத அவலம். இன்னொரு புறம் கருகிய பயிர்களைப் பார்த்து கண்ணீர் விட்டும் பல விவசாயிகள் மாண்டு வருவது ஒருபுறம். இப்படி விவசாயிகளின் துயரங்கள் நடப்பது தமிழகத்தில் அனைவருக்குமே தெரிந்த கண்ணீரில் நனைந்த கசப்பான உண்மை.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உழவின் அவசியத்தை உலகுக்கு சொன்னது தமிழ் மண். ஆனால் இந்த தமிழ் மண்ணில் மண்ணையும் காப்பாற்ற முடியாமல், விவசாய மக்களையும் காப்பாற்ற முடியாமல் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முறை செய்து காப்பாற்ற வேண்டிய மத்திய, மாநில அரசுகளோ விவசாயிகளின் வாழ்க்கையைப் பற்றி கொஞ்சமும் கவலைப்பட்டதாக தெரியவில்லை.

விவசாயி, தன்னையும், தமிழ் மக்களையும் காப்பாற்ற டெல்லியில் நியாயமாக போராடினான். நீதி கேட்டு போராடினார்கள், நிர்வாணமாக போராடினார்கள், சேலை கட்டி போராடினார்கள், மூத்திரம் குடித்து போராடினார்கள் முயற்சிகள் வீணானது.

மாநில அரசு தனது கட்சியையும் அரசையும் காப்பாற்றவே நேரம் இல்லாமல் தவிக்கிறது. விவசாயிகள் விஷயத்தில் நீலிக் கண்ணீர் வடிக்கிறது. மத்திய அரசு கைவிரித்த நிலையில் கண்டு கொள்ளாமல் போனது மகா துரோகம்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" என்றார் திருவள்ளுவர். விவசாயிகளின் கண்ணீர் பேரழிவிற்கான துவக்கம் என்பதை அரசுகள் உணர வேண்டும்

- ஆசிரியர்




# கோபக்கார தமிழன்

தமிழக விவசாயிகளின் பிரச்சினை களுக்குத் தீர்வு காணக் கோரி, தலைநகர் டெல்லியில் நடைபெற்றுவரும் போராட்டத்தில் பெண் களும் முன்னணியில் நிற்பது போராட்டத்துக் குப் பெரும் வலிமையைக் கொடுத்திருக்கிறது. வேளாண்மைக் களத்தில் பெண்களுக்கு இருக்கும் பங்கும் அக்கறையும் ஆண்களுக்குச் சற்றும் குறையாதவை என்பதை இவர் களுடைய பங்கேற்பு உணர்த்துகிறது.

தேசியக் குற்றப் பதிவு ஆணையம் சமீபத் தில் வெளியிட்ட அறிக்கையில், நாட்டில் 8,007 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளது.

தமிழகத்தைப் பொறுத்த வரை சுமார் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள் என விவசாயச் சங்க அமைப்புகள் தெரிவிக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தமிழக விவசாயிகள் தலைநகர் டெல்லியில் கடந்த 40 நாட்களுக்கும் மேலாக விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண் டும், தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டும், விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்திவருகிறார்கள்.

நூதன முறையில் விவசாயிகள் நடத்தி வரும் இந்தப் போராட்டத்தில் பெண்கள் இலை, தழைகளைக் கட்டிக்கொண்டும், அரைப் பாவாடையுடன் நின்றுகொண்டும் ஒப்பாரி வைத்தும் போராட்டம் நடத்துகிறார்கள். போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ராஜலட் சுமி, ராசம்மா, நச்சம்மா, செல்லம்மா ஆகியவர் களிடம் தொலைபேசி வாயிலாகப் பேசி னோம். அவர்கள் வெளிப்படுத்தும் உணர்வுகள் பிரச்சினையின் தீவிரத்தையும் போராட் டத்தின் வீரியத்தையும் உணர்த்து கின்றன.

விராலிமலை பகுதியில் இருந்து போராட் டத்தில் கலந்துகொண்டிருக்கும் ராஜலட்சுமி, தன்னுடைய 64 வயதில் ஒவ்வொரு நாளும் இருபது முதல் முப்பது கிலோ மீட்டர் தூரம் சென்று தண்ணீர் எடுத்து வருவாராம். "பேங்குல லோன் வாங்கி நிலத்திலுள்ள போர் போட்டா தண்ணீர் பிரச்சினை தீர்ந்துவிடும்.

பழைய மாதிரி விவசாயம் செய்யலாம் என்ற கற்பனையோடுதான் லோன்

வாங்கினேன். ஆனா போர் போட்டும் தண்ணீர் வரல. நெல், சோளம், தானியங்கள் விளைந்த எங்க நிலம், இப்போ தண்ணீர் இல்லாத காரணத்தால் தரிசா கிடக்கு. கடனை அடைக்க முடியாத காரணத்தால் என்னுடைய மகனும் அவன் பெண்டாட்டி, புள்ளைங்களைக் காப் பாத்த எங்களை விட்டுவிட்டு தனியா போயிட் டான். வங்கிலஇருந்து வரும் அதிகாரிங்க' அறிவு இல்லை? காசு மட்டும் வாங்க தெரிஞ்சிச்சு இல்ல.

அதை கட்ட முடியாதா?'ன்னு எங்களை ரொம்ப மோசமா பேசுறாங்க. இவங்க பேச்ச தாங்க முடியாம பேரிச்சம் பழ கம்பெனிக்குக் கூட வேலைக்குப் போனேன். ஆனா அங்க ஒரு நாளைக்கு அறுபது ரூபாய்தான் கூலி கொடுத் தாங்க. இந்தக் கூலியை வைச்சு எப்படி கடனை அடைக்க போறேன்னு தெரியலை" என்கிறார் துயரம் தேய்ந்த குரலில்.




துவரங்குறிச்சியில் இருந்து வந்துள்ள நச்சம்மாவோ, "காவிரி நீர் வராம எங்க நிலத் துல பயிர் பண்ண முடியல. மாடுங்க குடிக்கக் கூட போதுமான தண்ணி இல்லைங்க. மூணு லட்சம் ரூபாய் கடன், இப்போ வட்டி போட்டு ஏழு லட்சத்துக்கு வந்து நிக்குது. விவசாயம் செய்ய தண்ணீர் இருந்தாதானே பயிர் பண்ண முடியும். எங்க கடனை இந்த அரசாங்கம் தள்ளுபடி செய்யத்தான், இப்படி அரை பாவாடை கட்டிக்கிட்டு நிற்கிறோம். யார் யாரோ தொழில் அதிபருங்க, விளையாடுற புள்ளைங்களுக்கு கோடி கோடியாக கொடுக்கற இந்த அரசு, எங்களைப் போன்ற விவசாயி களுக்கு ஒரு நல்ல வழி செய்யாதா?" என்று கேட்கிறார். தன்னுடைய 60 வயதில் வீடு, வாசல், கணவர், பிள்ளைகள் என அனைவரை யும் சொந்த ஊரில் விட்டுவிட்டுப் போராட் டக் களத்தில் நிற்கிறார்.

"வயசான காலத்துல எங்கங்க வேலைக் குப் போக முடியும்? அப்படியே போனாலும் எங்களை யாருங்க வேலையில் சேர்த்துப் பாங்க?" எனக் கேட்கும் செல்லம்மா திருச்சி மாவட்டம் முசிறி கிராமத்திலிருந்து வந்துள் ளார். தன்னுடைய கணவருடன் போராட்டத் தில் ஈடுபட்டுவரும் இவர் டிராக்டருக்காகக் கடன் வாங்கியிருக்கிறார். ஆனால் மழை இல்லாத காரணத்தால் ஏற்பட்ட வறட்சி இவர்களின் வாழ்க்கையிலும் விளையாடி விட்டது. "வெளி வேலைக்கு இந்த வயசுல போக முடியல. வீட்டில் இருக்கிற ஆடு, மாடுகளை வித்து சாப்பிடறோம்" என்கிறார் இவர்.

இவர்களைப் போல் நாட்டில் உள்ள ஒவ்வொரு விவசாயிக் குடும்பத்துக்கும் சராசரியாக 47 ஆயிரம் ரூபாய் கடன் உள்ள தாக தேசிய மாதிரி ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தமிழகத்தில் வறட்சி, விவசாயம் செய்யப் போதிய நீர் இல்லாதது போன்ற காரணங்களால் 2005 முதல் 2014 வரையிலான பத்து ஆண்டு களில் மட்டும் சுமார் பன்னி ரண்டு லட்சம் ஏக்கர் விவசாய நிலம், வேறு பணிகளுக்காக மாற்றப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

ஊருக்கே உணவு அளித்த விவசாயிகள் தற்போது தங்களின் அன்றாட வாழ்வாதாரத்துக் காகப் போராட்டம் நடத்திவருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளுக்கு அரசு காது கொடுத்து, உரிய தீர்வை வழங்க வேண்டும் என்பதே விவசாயத்தின் மீது அக்கறை உள்ளவர்களின் எதிர்பார்ப்பு. நமக்குச் சோறிடு பவர்களின் துயரம் தீராமல் இருப்பது, நம் துயரமும்தானே.

- வி. அருணாச்சலம்



கண்டுகொள்ளாத ஆட்சியர்?

# ஆக்கிரமிப்பின் பிடியில் திருவண்ணாமலை..!

ஆன்மிக நகரான திருவண்ணாமலையில் புனிதமானதாக கருதப்பட்ட குளங்கள் ஆக்கிரமிப்பின் பிடியில் சிக்கி அழிந்து வருவதாக பக்தர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.



திருவண்ணாமலையின் பெருமைகளில் முக்கியமானது, இங்கு அமைந்துள்ள பிரமாண்டமான குளங்கள். கடந்த 16ம் நூற்றாண்டில் சைவ எல்லப்ப நாவலரால் பாடப்பட்ட அருணாச்சல புராணத்தின் ஒரு பகுதியான தீர்த்த சருக்கத்தில், திருவண்ணாமலையில் 360 குளங்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.

ஒரு சிறிய நகரின் பரப்புக்குள், 360 குளங்கள் என்பது வியப்புக்குரியது. மழைநீர் சேமிப்பின் அவசியத்தை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாம் அறிந்து வைத்திருந்ததற்கு சாட்சிகளாக அமைந்திருக்கிறது.

திருவண்ணாமலையில் அமைந்துள்ள ஒவ்வொரு குளத்திற்கும், மழைநீர் வந்தடையவும், கிரிவல மலையில் இருந்து வழியும் நீர் வந்தடையவும், முறையான நீர்வழித்தடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முறையான கட்டமைப்பு வசதியும், நான்கு திசைகளிலும் முறையான படிக்கற்கள் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்களுடன் இக்குளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு குளம் முழுமையாக நிரம்பியதும், அதன் உபரிநீர் அடுத்தடுத்த குளங்களை சென்றடைய, பூமிக்கடியில் பாதாள கால்வாய் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக, அண்ணாமலையார் கோயிலுக்குள் அமைந்துள்ள பிரம்ம தீர்த்தம், சிவகங்கை தீர்த்தம் நிரம்பியதும், அதன் உபரி நீர் சக்கர குளத்திற்கும், அதிலிருந்து ஐயங்குளத்திற்கும் என தொடர்ச்சியாக நீர்

தடையின்றி சென்றடையும் வசதியிருந்தது. ஆனால், திருவண்ணாமலை குளங்களின் இன்றை நிலை பரிதாபமாகவும், அதிர்ச்சி யாகவும் மாறியுள்ளது.

அன்று வாழ்ந்த நமது முன்னோர்களின் எதிர் பார்ப்பற்ற உழைப்பால் உருவான 360 குளங்களில், 200க்கும் மேற்பட்டவை இருந்த இடம் தெரியாதபடி ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன. அண்ணாமலையார் கோயிலை சுற்றிலும் இருந்த எண்ணற்ற குளங்களில், தற்போது சக்கர குளம், சிவாஞ்சி குளம் ஆகியவை மட்டும்தான் தப்பிப் பிழைத்துள்ளன. மற்ற குளங்கள் அனைத்தும் ஆக்கிரமிப்பின் பிடியில் காணாமல் போய்விட்டன. குளங்களுக்கான நீர் வழித்தடங்களும் மண்மூடி மறைக்கப்பட்டுவிட்டது.

திருவண்ணாமலையில் 25 ஏக்கர் பரப்பளவில் உருவான தாமரை குளம், நகரின் ஒட்டுமொத்த கழிவுகளும் தேங்கி நிற்கும் குளமாக காட்சி அளிக்கிறது. இதனை பராமரிக்க ஒதுக்கப்பட்ட நிதி என்ன ஆனது என்பது அதிகாரிகளுக்கே வெளிச்சம். குளங்களை பாதுகாக்க அரசு நிர்வாகம் தவறிவிட்டதால், தன்னெழுச்சியாக இளைஞர்கள் முன்வந்து, பிள்ளை குளம், பூமாந்தா குளம் ஆகியவற்றை சீரமைத்தனர்.

அப்போதும், அரசு நிர்வாகத்தின் குறட்டை சத்தம் குறையவில்லை. இதற்கு முன்பு ஏற்பட்ட கடும் வறட்சி காலங்களிலும் வற்றாத திருவண்ணாமலை குளங்கள், தற்போதைய வறட்சியில் வற்றிவிட்டன. அதற்கு முக்கிய காரணம், கிரிவலப்பாதையில் உள்ள குளங்கள் அனைத்தும் கேட்பாரற்ற நிலையில், பராமரிப்பின்றி அழிந்து வருகின்றன.

ஆக்கிரமிப்பு மற்றும் பராமரிப்பு இல்லாததால் அழிந்துபோன குளங்களை மீட்டெடுப்பதில், அரசுக்கு நடைமுறை சிக்கல்கள் இருக்கிறது. ஆனால், அழிவின் விளிம்பில் உள்ள குளங்களை பாதுகாப்பதில் எந்த தடையும் இல்லை. எனவே, கிரிவலப்பாதையில் உள்ள சோண நதி தீர்த்தம், சூரிய குளம், சந்திர குளம், பச்சையம்மன் குளம், அபய மண்டப குளம், அடி அண்ணாமலை குளம், சிங்கமுக தீர்த்தம் போன்றவற்றையாவது பாதுகாக்க வேண்டும்.

அப்போதுதான், திருவண்ணாமலையின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்க முடியும். வறட்சியிலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாமல் ஆன்மிக நகரை காப்பாற்ற முடியும்.

**- குருதேவ்**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

# மக்கள் விசாரணை

Applied in NEWS PAPER ASSOCIATION OF INDIA

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-5 மே-2017 இதழ் - 12

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக வெளியிடுபவர் ஆசிரியர்

**A. மவுரியன்,** B.A. Dip. Journlism

• ஆசிரியர் குழு

**A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன், V. அருணாச்சலம், காசி. அரங்கநாதன்**

• நிர்வாக ஆசிரியர்

**வீ. வடிவேல், B.B.A.,**

• உதவி ஆசிரியர்

காக்களூர் **ஆ. துரைபாபு**

• துணை ஆசிரியர்கள்

**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், M. தரணி, என். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, வீரஆறுமுகம்,**

• முதன்மை செய்தியாளர்கள்

**சமயசெல்வம், ராம்குமார், பிரகாஷ், சந்திரபாபு, நாகராஜ பெருமாள்**

**R. ஜெயா, K. ஷமீம் ஷகீலா, P. சாந்தா, சசிக்குமார், குமரேசன், டி. அக்ரம்கான், கக்கர்கான், பா. சுப்பிரமணியன், நாகராஜ், மாரிமுத்து, சுசீ சுல்தான், ராமசுப்பிரமணியன், சிவப்பராஜ்,**

• நிருபர்கள்

**எம். நிவேதிதா, கிரிஷ், கனகதுர்கா, ராஜேஷ் அக்லாண்டேஸ்வரி, குருதேவ், சர்சின்**

• சட்ட ஆலோசகர்கள்

**M. குணசீலன், B.Com.,M.L., M. சுதாகர், B.Sc.,B.L.,**

(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர் : **எம். சந்தோஷ்சிவன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS CREATIVE'S**

அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.2/12, 2-வது சந்து, தபராஜ் பில்டிங் முதல் மாடி, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.

Email : writermouryan@gmail.com www. makkalvisaranai.com

Information Contact : feedback@makkalvisaranai.com

Phone : 044 - 4354 2611, 93821 33334

Press & Registration of Book Act-in படி செய்திகள் தொகுக்க ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

# யுத்த களத்தில்



முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் என்ற இரண்டு பேரின் ஈகோ யுத்தமாக மாறியுள்ளது அதிமுக இணைப்பு விவகாரம். இரண்டு அணியின் முக்கிய முதல்வரிசை தலைவர்கள் தங்களுக்குள் ஒரு 'ரகசிய பிளாட் பார்மில்' பேசிக்கொள்கிறார்கள்.

அதில் நல்ல முடிவை அணியின் தலைவர்கள் எடுத்தால் நமக்கு நல்லது தானே.அவர்களுக்கு நாம் எப்போதும் ஒத்துழைப்புக் கொடுப்போம் என முடிவும் செய்துள்ளனர். ஆனால் இரண்டு அணியின் தலைவர்கள் நிலைமை வேறுமாதிரியாக இருக்கிறது. பழனிச்சாமியும் பன்னீர் செல்வமும் விதித்துக்கொள்ளும் நிபந்தனைகள் அவர்களின் சந்திப்பை, அணிகளின் பேச்சுவார்தையைத் தள்ளிப்போடுகிறது. இதில் இரண்டு அணிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் கடுமையான அதிருப்திக்கு ஆளாகியுள்ளனர்.

அதிமுக இணைப்பை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிதான் தள்ளிப் போட்டுள்ளார் என்கிறார்கள் ஓபிஎஸ் அணியினர். சேலத்தில் பேட்டியளித்திருந்த எடப்பாடி பழனிச்சாமி, 'எங்களுக்கு 122 எம்எல்ஏக்கள், 29 மக்களவை உறுப்பினர்கள், 9 மாநிலங்களவை உறுப்பினர்கள், 50 மாவட்ட செயலாளர்களில் 48 மாவட்ட செயலாளர்களின் ஆதரவு உள்ளிட்ட 90 சதவீத நிர்வாகிகள் ஆதரவு என அனைத்து தரப்பிலும் எங்களுக்கு தான் அதிகமாக ஆதரவு உள்ளது" என்றார்.



இதில் கடுப்பான ஓபிஎஸ், வட சென்னையில் நடந்த மே தினக் கூட்டத்தில், 'எடப்பாடி அணியினர் பேச்சுவார்த்தை என்ற பெயரில் கபட நாடகம் ஆடுகின்றனர். எடப்பாடி பழனிச்சாமி டி.டி.வி. தினகரனின் கூட்டாளி' என்று கடுமையாகத் தாக்கினார். இதனால் இரண்டு அணிகளும் இணையவே வாய்ப்பில்லை என்கிறார்கள் அதிமுக மூத்த நிர்வாகிகள்.



ஓபிஎஸ் கடந்த 6 ஆண்டுகளாக நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போது என்னென்ன தவறு செய்தார். அவரின் துறையில் என்னென்ன முறைகேடு நடந்தது.

மணல் கடத்தல் அதிபர் சேகர் ரெட்டிக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு என்ன? கிரானைட் முறைகேடுகள், தாது மணல் முறைகேட்டில் அவருக்கு பங்கு உள்ளதா? அதில் விதிமுறைகளை மீறி கொடுக்கப்பட்ட அனுமதிகள், சலுகைகள் குறித்தும் தகவல் சேகரிக்க சம்பந்தப்பட்ட துறைகளுக்கு எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிட்டுள்ளார்.

மேலும், அன்பு நாதனுக்கும் அவருக்கும் என்ன தொடர்பு உள்ளிட்ட விவரங்களை சேகரிக்கவும் எடப்பாடி உத்தரவிட்டுள்ளார்

அதே போல ஓபிஎஸ் முதல்வராக இருந்த போது என்ன வகையான டெண்டர்கள், எந்த துறைகளில் அதிகம் போடப்பட்டன, அவற்றில் முறைகேடுகள் நடந்துள்ளனவா என்றும் துருவ ஆரம்பித்துள்ளது எடப்பாடி பழனிச்சாமியின் அதிகாரிகள் குழு. அதோடு ஓபிஎஸ் முதல்வர் பதவியைப் பயன்படுத்தி, அவரின் தம்பி, மகன்கள் உள்ளிட்ட உறவினர்கள் முறைகேட்டில் ஈடுபட்டனரா என்பது குறித்தும் பட்டியல் எடுக்க சொல்லியிருக்கிறார் பழனிச்சாமி.

வரும் 5-ம் தேதி முதல் மாநிலம் முழுவதும் அரசியல் சுற்றுப் பயணம் செய்ய ஓ. பன்னீர்செல்வம் திட்டமிட்டுள்ளார். அப்போது, எடப்பாடி பழனிச்சாமி குறித்து பகிர் குற்றச்சாட்டுக்களை வெளியிட தேவையான ஏற்பாடுகளை ஓபிஎஸ் முடுக்கி விட்டுள்ளார்.

எடப்பாடி முதல்வராகப் பொறுப் பேற்றது முதல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், போடப்பட்ட டெண்டர்கள், கையெழுத்திடப்பட்ட கோப்புகளின் உண்மைத் தன்மைகள் என்று எல்லாவற்றையும் தோண்டி எடுக்கிறார்கள் ஓபிஎஸ் அணியின் ஆதரவு அதிகாரிகள். அதில் நிறைய தில்லு முல்லுகள் நடந்துள்ளன என்பது ஓபிஎஸ் அணியின் அசைக்க முடியாத வாதம். பழனிச்சாமி, பன்னீர்செல்வத்தின் ஈகோ யுத்தமாக மாறிவிட்டது அதிமுக இணைப்பு. இன்னும் என்ன னென்ன நடக்குமோ? இதனால் தமிழகத்திற்குத்தான் ஈடுசெய் ஏற்றுக் கொள்ள முடியாத மாபெரும் இழப்பாகும்

- ஆசிரியர்

# இரட்டை இலை..?



# செயலற்றுக் கிடக்கும் தமிழக அரசு!

தமிழகத்தில் மக்கள் பணிகள் எதுவும் நடப்பதில்லை. இங்குஉள்ள அரசுகோமா நிலைக்கு சென்றுவிட்டது என காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் திருநாவுக்கரசர் தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் மாநில மகிளா காங்கிரஸ் சார்பில் நடை பெற்ற இந்திரா காந்தி நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வந்த காங்கிரஸ் மாநிலத் தலைவர் திருநாவுக்கரசர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது முதல் இதுவரை தமிழக அரசு கோமா நிலையில்தான் உள்ளது. பாஜக வுடன் தமிழகத்தில் கூட்டணி வைத் துக்கொள்ள எந்தக் கட்சியும் தயாராக இல்லை. இதனால் பின்புற வாசல் வழியாக தமிழகத்துக்குள் நுழைய பாஜக முயல்கிறது. அதிமுக கட்சியை முதலில் உடைத் தார்கள். தற்போது சேர்க்கிறார்கள்.

தமிழக அமைச்சர்கள் பொம்மைகள் போல் உள்ளனர். இவர்களை நூலில் கட்டி பொம்மலாட்டம் ஆடுவதுபோல் பிரதமர் மோடி இயக்கி வருகிறார். குடியரசுத் தலைவர் தேர்தல், குடியரசு துணைத் தலைவர் தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் ஆகியவற்றை எதிர்கொள்ள இருப்பதால், தமிழகத்தில் பாஜக காலூன்ற முயற்சிக்கிறது. இதற்கு வருமானவரித்துறை உள்ளிட்ட அரசுத் துறைகளை பாஜக பயன்படுத்தி தவறான வகையில் சிலரை அச்சுறுத்தியும், ஆசை காட்டியும் வருகிறது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணத்தில் சிபிஐ விசாரணை வேண்டும் என தற்போது சொல்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன்.



விசாரணையில் அகில இந்திய அளவில் சுகாதார அமைச்சர், எய்ம்ஸ் டாக்டர்கள் மட்டுமின்றி பிரதமர் மோடியையும் விசாரிக்க வேண்டும். ஜெயலலிதா வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்ட மோடியால் ஏன் 75 நாட்கள் மருத் துவமனையில் இருந்த ஜெயலலிதாவை வந்து பார்க்க முடியவில்லை. இதையெல்லாம் சேர்த்து விசாரிக்க வேண்டும்.

தமிழகத்தில் கடுமையான வறட்சி, குடிநீர் பஞ்சம், மதுக்கடைக்கு எதிராக போராட்டம் என நடந்து கொண்டு இருக்கிறது. வறட்சிக்கு குறைவான நிவாரணத் தொகை ஒதுக்கி தமிழகத்தை ஒட்டு மொத்தமாக மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் மத்திய அரசு நடத்துகிறது. பாகுபாடின்றி அனைத்து விவசாயிகளின் கடன்களும் ரத்து செய்யப்பட வேண்டும்.

அமைச்சர்கள் பதவிச் சண்டையில்தான் இருக்கிறார்கள். இவர்கள் பிரச்சினையை விரை வில் தீர்த்துக்கொண்டு மக்கள் பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

– சத்தியராஜ்



# பத்திரிகையாளர்களின் சுதந்திரத்தை பறிக்கும் அ.தி.மு.க.



பத்திரிக்கையாளர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் கொடுங்கரங்களாக ஆட்சியாளர்கள் மாறிவிடக் கூடாது என்று திமுக செயல் தலைவர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப்படும் ஊடகத் துறை சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் செயல்பட்டால்தான் மக்களுக்கு உண்மைகள் சென்று சேரும்.

ஊடக சுதந்திர நாளில் இதனை நினைவூட்ட விரும்புகிறேன். தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளர் கருணாநிதியின் வழி காட்டுதலில் நடைபோடும் திமுக சார்பில் பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சியில் இருப்பவர்களுக்கு அஞ்சாமல், நிறை-குறைகளை சரியாக எடைபோட்டு, நேரங்காலம் பார்க்காமல் மக்கள் நலன் சார்ந்த செய்திகளை எடுத்துரைக்கும் பெரும்பணியினை பத்திரிகையாளர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் கொடுங்கரங்களாக ஆட்சியாளர்கள் மாறிவிடக் கூடாது என்பதுதான் இந்த நாளில் நினைவுகொள்ள வேண்டிய செய்தியாகும்.

அதிகார வர்க்கத்தின் நெருக்கடிகளை எதிர்கொண்டு, ஜனநாயகக் காற்றை தொடர்ந்து வீசச் செய்யும் போராட்டத்தை பேனா என்ற ஆயுதத்தின் மூலம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அறிவாயுதம் நடுநிலை தவறாமல் செயல்பட்டு எளிய மக்களின் தண்பனாகத் திகழ வாழ்த்துகிறேன். இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

- வீ. வடிவேலு

# சின்னா பின்னமாகும் சிறு பட்ஜெட் படங்கள்




தமிழ் திரையுலகம் இப்போது சந்தித்து வரும் மிகப்பெரிய பிரச்னை, சிறு பட்ஜெட் படங்கள் தயாரிப்பிலிருந்து வெளியீடு வரை சிக்கித் தவித்து வருவதுதான். "தணிக்கை செய்யப்பட்டு வெளிவர தயாராக உள்ள 400 படங்கள் வரை வெளிவர முடியாமல் முடங்கிக் கிடக்கிறது" என்கிறார் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர். இந்த நிலைக்கு என்ன காரணம்?

10 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆண்டுக்கு சராசரியாக 100 படங்கள் வெளிவந்தது. இது படிப்படியாக உயர்ந்து தற்போது ஆண்டுக்கு 250 படங்கள் வரை வெளிவருகிறது. இதற்கு காரணம் டிஜிட்டல் மயம். டிஜிட்டல் கேமராக்கள், டிஜிட்டல் திரையிடல்கள் என சினிமா டிஜிட்டல் மயமாகிவிட்டது.

சாதாரண ஸ்டில் கேமராக்களை கொண்டே திரைப்படத்தை எடுத்து விட முடியும். 'வழக்கு எண் 18/9' படம் துவக்கி வைத்த இந்த முறைதான் இப்போது சினிமாவின் நிரந்தரமாகி விட்டது.

வாடகை குறைவு, பெரிய அளவில் லைட்டிங் தேவையில்லை என்பது உள்ளிட்ட டிஜிட்டலின் பல வசதிகள், சினிமாவை நேசிக்கும் இளைஞர்களை படம் எடுக்க தூண்டியிருக்கிறது. எந்த இயக்குனரிடமும் உதவியாளராக இல்லாமல், சினிமா பற்றி படிக்காமல், எந்த முன் அனுபவமும் இல்லாமல் படம் எடுக்கும் இயக்குனர்கள் பெருகி வருகிறார்கள். அதனால் படமும் பெருகி விட்டது.

கடந்த வாரத்தில் ஒரே நாளில் 11 படங்கள் திரைக்கு வந்தன. இதில் பல படங்கள் தியேட்டர்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதனால் சிறுபடங்கள் தயாரிப்பை முறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் தயாரிப்பாளர் சங்கத்தில் எழுந்துள்ளது.

"அனுபவம் இல்லாதவர்கள், சினிமா பற்றி தெரியாதவர்களால் திரைத்துறையில் குப்பைகள் பெருகி விட்டது. இனி சினிமா அறிவு இல்லாதவர்களை படம் எடுக்கவே அனுமதிக்ககூடாது. இந்தசினிமா குப்பைகள் பெருக்கமே அனைத்து பிரச்னைகளுக்கும் மூல காரணம். இனி சினிமா பற்றி தெரியாதவர்கள் இயக்கும், தயாரிக்கும் படங்களில் பெப்சி தொழிலாளர்கள் பணியாற்ற மாட்டார்கள்" என்கிறார் இயக்குனர்கள் சங்க பொதுச் செயலாளரும், பெப்சி தலைவருமான ஆர்.கே.செல்வமணி.

கடந்த ஆண்டு வெளிவந்த 250 படங்களில் 10 படங்கள்தான் பெரிய படங்கள் மீத முள்ள 240 படங்களை நாங்கள்தானே திரையிட்டுக் கொடுத்திருக்கிறோம். 60 தியேட்

டர்கள் இந்த ஆண்டு மூடும் நிலையில் இருக்கிறது. அப்போது இன்னும் பிரச்னை அதிகமாகும். இதற்கு ஒரே வழி தியேட்டர் களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.



அதற்கு மக்கள் தியேட்டருக்கு வர வேண்டும். மக்கள் வரவேண்டும் என்றால் திருட்டு விசிடி ஒழிய வேண்டும், இணைய தளத்தில் படம் வெளியாகாதபடி செய்ய வேண்டும். ஆனால் அதை திரையுலகினர் தடுப்பதில்லை என்றார். அதே சமயம் பல சிறு படங்கள் திரும்பட எடுக்கப்பட்டும் தியேட்டர்களிலிருந்து சீக்கிரமே எடுப்பதற்கும் அல்லது தியேட்டர் கிடைக்காமல் போவதற்கும் பெரிய படங்கள் காரணமாக அமைகின்றன. முன்பு மூன்று அல்லது நான்கு ஸ்டார் ஹீரோக்களின் படங்களுக்கு மட்டும் தான் அதிக தியேட்டர்களை பிடித்துக் கொள்வார்கள். ஆனால் இப்போது அவர்களுக்கு அடுத்தடுத்த நிலையில் இருக்கும் எல்லா ஹீரோக்களின் படங்களுக்கும் தியேட்டர்களை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். இதனால் பல சிறு படங்கள் நல்ல 'மவுத்டாக்' கிடைக்கும் நேரத்தில் தியேட்டரிலிருந்து தூக்கப்படும் அவலமும் தொடர்கிறது.

20 லட்சம் ரூபாய் இருந்தால் ஒரு படம் எடுத்துவிடலாம் என்கிற நிலையில் தினமும் 4 படத்துக்கு பூஜை போடப்படுகிறது. வாரத்திற்கு குறைந்த பட்சம் 4 முதல் 8 படங்கள் வரை வெளிவருகிறது. இந்த படங்களுக்கு இடையில் தரமான சிறுபட்ஜெட் படங்களும் உருவாகிறது. ஆனால் அவை தியேட்டரை வந்து சேர்வதற்குள் படாதபாடு படுகிறது. சிறுபட்ஜெட் படங்கள் குறைந்த அளவே வசூலை கொடுக்கும். அதிலும் 30 சதவீதம் வரிவிலக்கு பெறுவதற்காக போராடுகிறது. வரிவிலக்கு பெறுதற்கு 'யு' சான்றிதழ் முக்கியம். கடும் போராட்டத்துக்கு பிறகு யு சான்றிதழுடன் வரிவிலக்கிற்கு விண்ணப்பத்தால் அங்கு பெரிய அரசியல் இருக்கிறது என்கிறது கோலிவுட் வட்டாரம்.

ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற வேறுபாடு பார்ப்பதாக குற்றச்சாட்டு உள்ளது. பெரிய படங்கள் தாராளமாக லஞ்சம் கொடுத்து வரிவிலக்கு பெற்று விடுகிறார்கள். காரணம் அவர்களுக்கு வரிவிலக்கால் பல கோடி லாபம் கிடைக்கிறது. ஆனால் சிறுபட்ஜெட் தயாரிப்பாளர்கள் அல்லல்படுகிறார்கள். குறைந்த பட்சம் 10 லட்சம் வரை லஞ்சம் கேட்கப் படுவதாக புகார் கூறப்படுகிறது.

'லஞ்சம் கொடுக்க மறுத்த காரணத்தால் சமீபத்தில் வெளியான ஒரு தேசபக்தி படத்துக்கும் தலைப்பில் நம்பர் கொண்ட படத்திற்கும் வரிவிலக்கு கொடுக்கவில்லை. வரிவிலக்கு வேண்டும், வேண்டாம் என்பதை பணமே தீர்மானிக்கிறது" என்கிறார் முன்னணி தயாரிப்பாளர் ஒருவர்.

- அகிலாண்டேஸ்வரி



ஆ. மவுரியன்

சரித்திரத் தொடர் 5

## தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

நவீன இயந்திரங்கள் இல்லாத அக்காலத்தில் கொடைக்கானல் மலையடிவார பாதைகளை சிறப்பாக அமைத்து ஆங்கிலேயர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

அக்காலத்தில் சிறப்பாக செயல்பட்ட தொண்டி துறைமுகத்தையும், தூத்துக்குடி துறைமுகத்தையும் மதுரையுடன் இணைக்கும் வகையில் தேசிய வர்த்தக சாலைகளை உருவாக்கினார். தனது ஆட்சிப்பகுதியின் முக்கிய நகரங்களாக திகழ்ந்த திருநெல்வேலி, கம்பம் போன்ற தொலைதூர ஊர்களுக்கும் மதுரையிலிருந்து எளிதாக செல்ல சாலைகளை அமைத்ததால் மக்களின் ஆதரவும், அன்பும் பெருகியது.

இதைப்பற்றி "A VIEW OF THE ENGLISH INTERESTS IN INDIA" என்ற நூலில் கர்னல் வில்லியம் புல்லர்டன் என்ற ஆங்கிலேயர் கீழ்கண்டவாறு வர்ணிக்கிறார்.

"மருதநாயகத்தின் ஆட்சியின் கீழ் நிர்வாகம் மிகவும் சுறுசுறுப்பாகவும், பலன் தரத்தக்கதாகவும் செயல்பட்டது. அவரது நீதி சார்பற்று இருந்தது. அவரது செயல்பாடுகளை,

நடவடிக்கைகளை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்று பின்பற்றினார்கள்" இவ்வாறு மருதநாயகத்தின் ஆட்சியை அந்த ஆங்கிலேயர் புகழ்கிறார்.

மதுரை மாநகரின் நிர்வாகம் அவரது ஆட்சியில் எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதை நாட்டுப்புறப் பாடல்களும் விளக்குகின்றன. காணு வழி மீதில் பதின்மூன்று வராகனை எறிந்தான்.

(யாரும்) எட்டி அதை பார்க்க முடியாது.

அதிலே, ஈ - எறும்பு மொய்க்காமல் இருந்ததடா பணமும் என்றும், கட்டேது காவலறியர்கள் - தேசம் கறந்து பால் வெளி வைத்தால் காகம் அணுகாது என்றும் அவன் சிறப்பை பாடல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

(நன்றி : மதுரை நாயகன் மாவீரன் கான்சாஹிபு - நந்தர்ஷா)

அதாவது அவரது ஆட்சியில் செல்வம் சாலையில் கொட்டிக் கிடந்தால், அதில் ஈ - எறும்பு கூட அணுக அஞ்சும் என்பதும், கறந்த பாலை சொம்பில் வைத்துவிட்டு சென்றால் காக்கா கூட நெருங்க அஞ்சும் என்பதும் அதன் அர்த்தமாகும்.

அவரது ஆட்சியில் திருட்டு பயம் இல்லை என் பதையும், குற்றங்கள் குறைவு என்பதையும்தான் இதன் மூலம் விளங்க முடிகிறது.

**மனிதநேய கொள்கை**

அவரது மனைவி மாசா போர்ச்சுகீசிய ஆணுக்கும், தலித் பெண்ணுக்கும் பிறந் தவள் என்றும் கூறப்படுகிறது. ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகள் உள்ளிட்ட ஐரோப் பிய மொழிகளில் அவர் கெட்டிக்காரராக திகழ்ந்தார்.

மருதநாயகம் சிறந்த முஸ்லிமாக தனது வாழ்நாளை கழித்திருக்கிறார். தொழுகையை தவறாது கடைப் பிடித் திருக்கிறார். இதை "ஆலிம் குலம் விளங்க வரும் தீரன்" எனும் அவர் புகழ்பாடும் நாட்டுப்புற பாடல் வழியாக அறிய முடிகிறது. அவர் எல்லா மதங்களையும் சமமாக மதித்தார்.

முந்தைய ஆட்சியாளர்களால் அபகரிக் கப்பட்ட மதுரை அழகர் கோவிலின் நிலங் களை மீட்டு, கோயிலுக்கு திரும்பவும் ஒப்படைத்தார். மருதநாயகம் இந்து சமுதாய மக்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு செயல்பட்டார்.

அம்மக்களின் கோரிக்கையை ஏற்று மதுரை மீனாட்சியம்மன் கோயிலை சீர் செய்து கொடுத்ததால் மக்கள் இவரது ஆட்சியை போற்றினர். மதுரை மீனாட்சி யம்மன் கோயிலில் உள்ள செப்பேடுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

**தொடங்கியது மோதல்**

இவ்வாறாக, மதுரையில் கொடிகட்டிப் பறந்தது அவரது புகழ்! இதை ஆற்காடு நவாப் முகம்மது அலியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மூக்கு சிவந்தது! உள்ளம் வெந்தது!

விளைவு, திருச்சி பகுதியில் இனி மருதநாயகம் கப்பம் வசூலிக்கக் கூடாது என்று தடை விதித்தார் ஆற்காடு நவாப்! இதை எதிர்த்து ஆங்கிலேயர்களிடம் முறையிட்டார் மருதநாயகம். ஆங்கிலே யர்கள் கூறியும் ஆற்காடு நவாப் மசிய வில்லை! பிரச்சனையை சுமூகமாக தீர்க்க விரும்பிய ஆங்கிலேயர்கள், மருத நாயகத்திடம் திருச்சிதானே..

போனால் போகட்டும் உனக்கு மதுரை, திருநெல்வேலி பகுதிகளில் கப்பம் வசூலிக்கும் உரிமையை தருகிறோம் என்றனர்.

அதிலும் திருப்தியடையாத ஆற்காடு நவாப், வரவு - செலவுகளை மருதநாயகம் ஒழுங்காக சமர்ப்பதில்லை என்று அடுத்த குண்டை வீசினார். அவரது பொறாமை எந்தளவுக்கு இருந்தது என்றால், தன்னை நலன் விசாரிக்க வந்த மருதநாயகத்தை, "என்னை கொல்ல சதி செய்தார்" என்று அதிரடியாக புகார் கூறி பரபரப்பூட்டினார். இக்கால அரசியல் வாதிகளையே தூக்கி சாப்பிட்டார் நவாப்! ஆடிப் போய்விட்டார் மருதநாயகம்!

**ஒரு கட்டத்தில்**
**ஆற்காடு நவாபா? மருதநாயகமா?**
**யாருக்கு முக்கியத்துவம் கொடுப்பது?**
**யாருக்கு பணிவது? என**
**முடிவெடுக்க வேண்டிய தருணம்**
**ஆங்கிலேயர்களுக்கு வந்தது.**

- தொடரும்.

# குமாரனுக்கு அருளிய கணநாதன்



சோழ வளநாடு சோறுடைத்து என்பார்கள். இருமருங்கிலும் எங்கே திரும்பினாலும் கண்ணுக்கு இனிய பச்சைப் பசேல் என்ற பசுமை நிறைந்த நெல் வயல்களும் அவற்றைச் சூழ்ந்து நெளிந்து செல்லும் நீர் நிறைந்த வாய்க்கால்களும் பார்க்கப் பார்க்க அலுக்காத காட்சியாகும்.

சிதம்பரத்திற்கு தென்மேற்கே திருநாரையூர் என்னும் சிவஸ்தலம் ஒன்று இருக்கிறது. இவ்வூரிலே உள்ள பொல்லாப் பிள்ளையாருக்கு பூஜை செய்யும் பொறுப்பை அந்த ஆதிசைவக் குடும்பம் ஏற்றிருந்தது.

குடும்பத் தலைவர் ஒரு நாள் வேலை நிமித்தமாக வெளியூர் செல்ல நேர்ந்தது. திரும்பி வருவதற்குள், பகல் பொழுது பூஜை தவற கூடாது என்று, அவர் புறப்பட்டுச் செல்லும் போது தன் குமாரன் நம்பியை அழைத்து நம்பி திரும்பி வருவதற்கு நேரம் ஆகலாம். ஆகவே நாளைக்காலை பிள்ளையாருக்கு நீ தான் பூஜை செய்ய வேண்டும். சுவாமிக்கு அபிஷேகம் செய்துவிட்டு திலகமிட்டு மலர்களைச் சாத்தி நைவேத்தியம் செய்துவிடு! சாயங்கால பூஜைக்கு நான் வந்து விடுவேன் என்று சொல்லிவிட்டுச் சென்றார் அவர்.

நம்பியோ, படித்துக் கொண்டிருப்பவன். காலையில் குறித்த காலத்தில் வகுப்புக்கு அவன் செல்லாவிடில் அன்றைக்கு பாடம் படிக்க ஆசிரியர் அனுமதிக்கமாட்டார். ஆகவே அவன் அம்மாவை அழைத்து பிள்ளையாருக்கு வேண்டிய நைவேத்தியத்தை பகவானுக்கு நிவேதனம் செய்ய வேண்டிய அன்னத்தை வடித்துக் கொடுத்தான்.

நம்பி உடனேயே நீராடி உலர்ந்த வஸ்திரங்களை அணிந்து கொண்டு ஒரு கையில் செப்புக் குடமும் மற்றொரு கையில் வஸ்த்திரம் போட்டு மூடிய நிவேதன பாத்திரத்துடன் புறப்பட்டான். கோவிலில் நிவேதன பாத்திரத்தை வைத்து விட்டு கிணற்றிலிருந்து குடத்தில் நீர் எடுத்து வந்தான். பிள்ளையார் மீது முதல் போட்டிருந்த மலர்களை அகற்றிவிட்டு திருமஞ்சனம் செய்வித்தான். அபிஷேகம் முடிந்தது. உலர்ந்த வஸ்திரத்தை அணிவித்து சந்தன, குங்கும திலகமிட்டான். கோவில் பக்கத்திலிருந்த பூச்செடிகளில் மலர்களை பறித்து வந்து பிள்ளையாருக்குச் சூடினான்.

அதன்பின் வீட்டிலிருந்து அம்மா கொடுத்து அனுப்பியிருந்த வெண் பொங்கல் நிவேதனத்தை எடுத்து சுவாமி முன்பு வைத்தான். சுவாமி விநாயகப் பெருமானே இன்று அப்பா

## அற்புத ஆலயங்களின் ஸ்தல வரலாறு!



ஊருக்கு போயிருப்பதால் என்னை பூஜை செய்ய அனுப்பினார். எனக்கு தெரிந்தவரை செய்துவிட்டேன். என்மீது அன்பு வைத்து சந்தோஷமாக சாப்பிடுங்கள் என்று வேண்டிக் கொண்டான். நம்பிதகப்பனாரோடு கோவிலுக்கு பலமுறை வந்திருக்கிறான். ஆயினும் அவனுக்கு பூஜை முறை எதுவும் அவ்வளவாக தெரியாது.

தண்ணீர் கொண்டுவந்து அபிஷேகம் செய்வதும், வஸ்திரத்தை அணிவித்து மலர்களை கொண்டு அலங்காரம் செய்வதை கண்டிக் கிறானே தவிர நைவேத்தியம் செய்வதைப் பற்றி தெரியாது. வீட்டிலே நாம் உணவு உண்பது போலத்தான் சாப்பிடுவார் போலும் என எண்ணினான் அவன். அதன் காரணமாகவே நைவேத்திய அன்னத்தை சாப்பிடுமாறு சுவாமி யிடம் வேண்டினான். சிறிது நேரம் சென்றது. பாத்திரத்திலிருந்து அன்னம் அப்படியே இருந் தது. அப்போது அவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது.

தான் இங்கிருப்பதால் பிள்ளையார் சாப்பிட மறுக்கிறாரோ என எண்ணினான். சுவாமி நான் வெளியில் நிற்கிறேன். சீக்கிரம் சாப்பிடுங்கள் என்று கூறியபடி கதவை லேசாக சாத்திக்கொண்டு வெளியில் நின்றான். பின்பு சிறிது நேரம் கழித்து கதவை திறந்து உள்ளே சென்ற போது அவன் வைத் துச் சென்ற அன்னம் அப்படியே இருக்கிறது.

நம்பிக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் செய்த பூஜையில் ஏதாவது குறை கண்டாரா? உடனே அவன், பிள்ளையாரே ஏன் சாப்பிட மறுக்கிறீர்கள். நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா? எனக்கு பூஜை செய்யத் தெரியாது. நீங்கள் பட்டினி இருக்கக் கூடாதே என்று என்னை அப்பா அனுப்பினார். எனக்குத் தெரிந்தவரை செய்தேன். தவறு ஏதும் இருந்தால் என்னை மன்னித்து இவ்வமுதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வேண்டினான்.

அப்போதும் பிள்ளையார் அசையவில்லை. பள்ளிக்குச் செல்ல வேண்டிய நேரம் ஆகிவிட் டது. எவ்வளவோ மன்றாடினான். நீங்கள் சாப்பிட வில்லை என்றால் திரும்பி அன்னத்தை எடுத்துச் சென்றால் அப்பா என்னை அடிப்பாரே! நேரம் ஆகிவிட்டது என்று கெஞ்சினான்.

நம்பியின் கண்ணில் நீர் ததும்பியது. அழுதான் அப்போதும் பிள்ளையார் சாப்பிடவில்லை. அவன் பொறுமை இழந்து சுவாமியிடம் இப்போது சாப்பிடப் போகிறீர்களா, இல்லையா என்று கேட்டுக் கொண்டே, பீடக் கல்லிலே தலையைக் முட்டிக் கொண்டான்.



காக்களூர்
**த. துரைபாபு**

அதற்கு மேலும் கணநாதர் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. நம்பி போதும் போதும் நிறுத்து என்று கூறி விட்டு பாத்திரத்தில் இருந்த அன்னத்தை துதிக்கையால் எடுத்துச் சாப்பிட்டார். சிறுவனுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டோடியது.

விநாயகர் அவன் படைத்ததை உண்டு விட்டார் என்றதும் ஆனந்தம் அடைந்தான். ஒரு பக்கம், மறுபக்கம் பள்ளிக்கு செல்ல வேண்டிய நேரம் கடந்துவிட்டதே என்று பெருங்கவலை!

சுவாமி அப்போதே சாப்பிட்டு இருந்தால் நேரத்தோடு பள்ளிக்குப் போயிருப்பேனே. இனி சென்றால் ஆசிரியர் அனுமதிக்க மாட்டாரே என்றான். வருத்தப்படாதே நம்பி! நான் உனக்கு பாடங்களை சொல்லித் தருவேன் என்று கூறினார் விநாயகப் பெருமான்.

நம்பி வீட்டுக்கு வந்தான். வீட்டில் அம்மா விடம் கோவிலில் நடந்ததை சொன்னான். அம்மாவோ அதை நம்பவில்லை. எங்கோ ஊரைச் சுற்றி பையன்களோடு விளையாடிவிட்டு, சுவாமிக்கு நைவேத்தியத்திற்கு கொடுத்து அனுப்பிய அன்னத்தை சாப்பிட்டு விட்டு சுவாமியே சாப்பிட்டு விட்டதாக கதை அளக் கிறான் என்று எண்ணினாள். மாலையில் ஊர் திரும்பிய தன் தந்தையிடம் இச்செய்தி கேட்டு அம்மாவைப்போலவே நம்பி சொல்வதை நம்பத் தயாராக இல்லை. சாமியாவது சாப்பிடுவதாவது என ஏளனம் செய்தார்.

நம்பி ; நான் சொல்வது அனைத்தும் உண்மை என வாதிட்டான் அன்று மாலை பூஜைக்கு அப்பாவையும் அழைத்து சென்று விநாயகருக்கு முறைப்படி பூஜை செய்து நைவேத்தியம் படைத்து வேண்டினான். அப்பாவின் கண் முன்னாலே விநாயகர் நம்பியின் பக்திக்கு இறங்கி முன்போலவே திருவமுது உண்டு அவன் வார்த்தையை உண்மை நின நிருபணம் செய்தார். நம்பி மீது அப்பாவுக்கு அப்போது நம்பிக்கை வந்து மகிழ்ந்தார். — தொடரும்.

# சிந்தனை முத்துக்கள்..!



## கவுண்டர் வாய்ஸ்...

ரஜினி வாழ்க,
கமல் வாழ்க,
அஜித் வாழ்க,
விஜய் வாழ்க
அது சரி நாயே
நீ எப்ப வாழபோற....

## அழுகை

பணக்கார வீட்டில்
குழந்தைகள் சாப்பிட
அழுகிறது.
ஏழை வீட்டில் குழந்தைகள்
சாப்பாட்டிற்கு
அழுகிறது.



## எச்சரிக்கை

பணம் இருந்தும்
பட்டினி கிடக்கும் நாள்
வரும், அப்போது
விவசாயத்தின் தேவையை
உணர்வார்கள்.

## ராதா பஞ்ச்..

ஒரு ஓட்டுக்கு 4 ஆயிரம்
வாங்கின என்
அறிவாளி மக்களே!
நல்ல கால்குலேட் பண்ணிப் பாரு...
5 வருஷத்துக்கு 1825 நாள்
ஒரு நாளைக்கு வெறும் 2.19 பைசா
வாங்கிகிட்டு ஓட்டுப் போட்ட நீங்க,
அரசியல் வாதிகளைத் திட்றீங்களேடா
பிச்சக்காரன் கிட்டயே திருடித் திங்குற
கேவலமான ஆளுங்கடா நீங்க!

## ஆண் தத்துவம்

“
தன் மனைவியின்
கர்ப்ப காலத்தில் அவள்
ஆசைப்படுவதை
வாங்கித்தர முடியாத
அளவிலான வறுமை
எதிரிக்கும் மட்டுமல்ல
துரோகிக்கும் வந்து
விடக்கூடாது.
”



## இழப்பதற்கு ஒன்றுமில்லை

மழையை இழந்தோம்,
ஆறுகளை இழந்தோம்,
கடைசியாக
மானத்தை இழந்தோம்.
இனி மிச்சம் இருப்பது
உயிர் மட்டுமே.
அது இனி இருந்தால் என்ன,
போனால் என்ன.?

## சீமான் டச்

கரிகால சோழன்
காவிரியில கல்லணை
கட்டும்போது கன்னடம்னு
ஒரு மொழியே கிடையாது?
போடா, போடா
நாங்க தமிழன்டா..?




# நோ கமெண்ட்ஸ்

## ஆசிரியர்-டச்

பிரச்சனைகள் எல்லாம்
நிலவு போல ஒரு நாள் குறையும்.
ஒரு நாள் கூடும், ஒரு நாள்
காணாமலே போய்விடும். அதனால
கவலைகளை விட்டு விட்டு
சந்தோஷமாக உழையுங்கள்
வெற்றி உனதாகும்.



## ஆ.தே.மு. பஞ்ச்


முடியும் என நினைத்தால் முடியாதது உலகில் இல்லை. இந்த பாறைக்கு கீழே உள்ள கல்லை பாருங்கள். இந்த கல்லே பெரிய சுமையை சுமக்கும் போது சுமை என்று எதையும் ஒதுக்க வேண்டாம். பணி என்ற "ப"வை சுமையோடு சேருங்கள் வாழ்க்கை நல்ல பசுமையாகி வரும்.




## சிந்திங்க பாஸ்

நீங்கள் மென்று துப்பும் படுள் கம்மை உணவு என்று நினைத்து குருவிக்குள் அதை கொத்தும் போது குருவிகளின் அலகு Beak ஒட்டிக் கொள்கிறது. இதனால் உணவு உண்ண முடியாமல் பட்டினிகிடந்து இறக்கிறது நீங்கள் செய்யும் இந்த தவறு ஒரு கொலைக்கு சமம் என்பதே உண்மை. தவறை செய்யாதீர்கள்.!

## பாகுபலி தத்துவம்



மண்ணுக்கு ஆசைப்பட்ட
பல் வாள் தேவனும்,
பெண்ணுக்கு ஆசைப்பட்ட
பாகுபலியும்
மரண மடைந்தார்கள்.
ஆனால் எதற்கும்
ஆசைப்படாத கட்டப்பா
உயிரோடு இருந்தான்.
நீதி – ஆசையே
அழிவிற்கு அச்சாரம்

## டீக்கடை செய்தி

டீக் கடையில் பன்னுடன்
மடித்து தந்த கிழிந்த நாளிதழ்
துண்டின் செய்தியில் பாகுபலி
ரூ. 500 கோடி வசூலானது
என்பதைப் படித்துக் கொண்டே
சாப்பிட்ட பின் டீக்குக் கடன்
சொல்லிவிட்டு நடந்தார்
அந்த ஏழை விவசாயி.

புரட்சிக்கவிதை...
மறு பதிப்பு...

கூடி வாழ்ந்த குடும்பம் குடியால் கெட்டுப் போச்சு
நாடிவந்த சொந்தமெல்லாம் விட்டு விலகிப் போச்சு
ஓடி ஆடி உழைத்த பணம் குடித்தே ஓடிப் போச்சு
குடும்ப மானம் அத்தனையும் கப்பலேறிப் போச்சு....

போதையிலே மாறிப்போன பாதை எங்கே போகுது?
வீடு வந்து சேருமோ! மனைவி முகம் பார்ப்பேனோ?
தட்டில் சோறு கிடைக்குமா, தட்டு தடுமாறிப் போகுமோ?
தட்டுக் கெட்டுப்போன பின்னே சோகம் ஒரு கேடா?

பெற்றெடுத்த பிள்ளை முகம் பார்த்துப் பேச முடியல
என்னைப் பெற்றெடுத்த தாயின் முகம் பார்த்து பேச முடியல
பெற்றெடுத்த தாயின் வயிறு பற்றி எறிந்து போகுதே
உயிர் நாதியற்று போகுமே பாழும் இந்த உலகிலே

பட்டதெல்லாம் போதுமடா நம் சொந்த மண்ணிலே
புத்தி கெட்டதெல்லாம் போதுமடா நம் சொந்த வாழ்விலே
மது அருந்தி மதியிழந்தால் உனக்கு வரும் கேடு
மதுவை ஒழித்து வாழ்ந்து வந்தால் உறுப்படும் நம் வீடு
இதை உணராதவன் படும்பாடு
இதற்கு என்றும் இல்லை ஈடு

# அதிகாரத்தை கையிலெடுத்த பொதுமக்கள்..!



# கணவன் திருந்திய சந்தோஷத்தில் மனைவி தன் குழந்தைக்கு தாலாட்டு





சின்னப் பூங்குயிலே சிங்கார சிரிப்பழகே
கணணே கண்மணியே கண்ணுறங்கு பொன்மணியே
ஆராரோ ஆரிரரோ என்னுயிரே கண்ணுறங்கு

பொன்னூஞ்சல் செய்துவர போன அப்பன் வந்திட்டாரு
கண்ணே கண்மணியே பொன் மயிலே கண்ணுறங்கு
பட்டாலே தொட்டில் கட்டிப் பட்டுக் குஞ்சம் அதிலே கட்டி
பட்டுச் சட்டை போட்டுவிட்டேன் உன்மேனி மினுமினுக்க
புட்டாமா போட்டுவிட்டு திஷ்டி பொட்டும் வச்சுவிட்டேன்
கண்ணே கண்ணுறங்கு பொன் மணியே கண்ணுறங்கு

தத்தி தத்தி நீ நடக்க தங்க தண்டை நான் போட்டேன்
பட்டுமேனி பளபளக்க பட்டாடை ஜொலி ஜொலிக்க
துள்ளி துள்ளி ஓடிவாயே துன்பமெல்லாம் நான் மறக்க
அத்தான் அடித்தானோ உன்பட்டு கண்ணத்திலே
அத்தை முத்தம் கொடுத்தாளோ அல்லிப்பூ சென்டாலே
கண்ணே கண்ணுறங்கு பொன்மயிலே கண்ணுறங்கு

ஓடும் அருவியிலே ஓடி ஆடி குளிக்கனுமே
பாட்டும் பல பாடனுமே பாடிக் கூத்தாடனுமே
மீனு நண்டு புடிச்சிக்கிட்டு, ஆடி பாடி நடந்துக்கிட்டு
வீடு வந்து சேரயிலே விளக்கு வச்சுப் போகுமடி
பாலக் குடிச்சுப்புட்டு கண்மணியே கண்ணுறங்கு
பால் சுரந்த என்மேனி பசியாலே வாடுதடி
சீக்கிரமா நீ தூங்கு தாலாட்டு பாடிப்புட்டேன்.

- வீர. ஆறுமுகம்



# பொங்கி எழுந்த பஞ்சாயத்து ராஜ்ஜியம்..!

தொழிலாளர் தினத்தன்று நடந்த கிராம சபைக் கூட்டங்களில் மதுக் கடைகளை நிராகரிப்பது தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றக்கூடாது என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் கண்டிப்பான வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், தமிழகத்தில் முதல்முறையாக கிராம சபைக் கூட்டங்களில் இளைஞர்கள், பெண்கள் அதிகளவு கலந்துக்கொண்டு அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்து மதுக்கடைகளை அகற்றுவது உள்ளிட்ட தங்களது கிராமம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் குறித்து தீர்மானங்களை நிறைவேற்றினர்.

தமிழகத்தில் சமீப காலமாக பஞ்சாயத்து ராஜ்ஜியம் தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம் உயிர் பெறத் தொடங்கியிருக்கிறது. கடந்த தொழிலாளர் தினம் அன்று நடத்த வேண்டிய கிராம சபைக் கூட்டத்துக்கு அரசு சார்பில் ஒரு வாரம் முன்னதாகவே தண்டோரா அடிப்பது, நோட்டீஸ் ஒட்டுவது, விடு விடாக சென்று அழைப்பு விடுப்பது என செய்ய வேண்டிய நடைமுறைகள் எதுவும் பின்பற்றப் படவில்லை. இவற்றை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய உள்ளாட்சிகளின் ஆய்வாளர் களான மாவட்ட ஆட்சியர்களும் இதுகுறித்து அக்கறை காட்டவில்லை. மாறாக, அனைத்து மாவட்டங்களிலும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு 'மதுக்கடைகளை அகற்றுவது தொடர் பான தீர்மானங்களை நிறைவேற்ற விடக் கூடாது' என்று கண்டிப் பான வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

கடந்த மே 1-ம் தேதி கிராம சபைக் கூட்டத்தில் மதுக்கடையை அகற்றும் தீர்மானத்தை நிறைவேற்ற அனைத்து பஞ்சாயத்து செயலாளர்களும் மறுத்துவிட்டனர். ஆனால், முன்மாதிரி கிராமமான முடிச்சூர் ஊராட்சி யில் மக்கள் கடுமையாக போராடியதால் மதுக் கடையை அகற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒன்றியம், வாவிபாளையம் கிராம பஞ்சாயத்தில் காலை 10 மணிக்கு மக்கள் கிராம சபையைக் கூட்டினார்கள். ஆனால், அதிகாரிகள் தரப்பில் இருந்து ஒருவரும் வரவில்லை. பஞ்சாயத்து செயலாளர் மட்டுமே வந்திருந்தார். அங்கு மதுக்கடையை அகற்ற தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றபோது வட்டார வளர்ச்சி அலுவலரிடம் அனுமதி பெற வேண்டும் என்றார். மக்கள் சாலை மறியலில் ஈடுபடுவோம் என்ற பிறகு மதியத்துக்கு மேல் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரி ஒருவர் வந்தார். பிறகு பஞ்சாயத்து புத்தகத்தில் அதிகாரபூர்வமாக மதுக்கடையை அகற்றும் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

கடலூர் மாவட்டம் ராமநத்தம் கிராம பஞ்சாயத்தில் அதிகாரிகள் யாரும் வராத நிலையில் கிராமத்தின் இளைஞர்கள் தாமாக முன்வந்து மக்களைக் கிராம சபைக் கூட்டத்துக்கு அழைத்தனர். மக்கள் திரளாக கலந்துக் கொண்ட அந்தக் கூட்டத்தில் இராமநத்தத்தில் மதுக்கடைகளைத் திறக்க கூடாது, கிராமத்தின் பொது இடங்களில் மது அருந்த தடை விதிக்க வேண்டும், நீர் நிலைகளை தூர் வார வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கிராம சபைக் கூட்டத்தில் மக்கள் வலியுறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்ற வட்டார வளர்ச்சி அலுவலர் மறுக்க முடியுமா என்பது குறித்து உள்ளாட்சிகள் ஆய்வாளரும் காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் பிரிவு தலைவருமான பேராசிரியர் பழனிதுரையிடம் கேட்டோம். "சட்டப்படி எந்த அதிகாரியும் அவ்வாறு மறுக்க இயலாது. தங்கள் கிராமத்துக்கு என்ன தேவை? என்ன தேவையில்லை என்று தீர்மானிக்கும் சட்டப் பூர்வமான உரிமை அந்த கிராமத்தின் வாக்காளர்களுக்கு மட்டுமே இருக்கிறது. தவிர, கிராம சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற மக்கள் யாருடைய அனுமதியையும் பெறத் தேவையும் கிடையாது. மக்களின் அறியாமை காரணமாகவே அதிகாரிகள் பல இடங்களில் தீர்மானம் நிறைவேற்றுவதைத் தடுத்துள்ளனர்.

இதுகுறித்து வழக்கு தொடர்ந்தால் மாவட்ட ஆட்சியர் வரை நீதிமன்றத்தில் பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஆனாலும் இப்போதும் பிரச்சினை ஒன்றுமில்லை. தடுக்கப்பட்ட இடங்களில் அடுத்த மாதமே மக்கள் சிறப்பு கிராம சபைக் கூட்டத்தை கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்றார்.

தமிழகத்தில் ஏராளமான கிராமங்களில் மதுக்கடைகளை மூட வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அடுத்த கட்ட நடவடிக்கையாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஆட்சியர்கள் நடவடிக்கை எடுக்க மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றங்களை நாடி மதுக்கடைகளை அகற்ற கிராம மக்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

- இர்வின்


# மக்கள் விசாரணை (மாதஇதழ்)

## சந்தாதாரர் ஆக வேண்டுமா?

கீழ்கண்ட சந்தா படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான சந்தாவை குறிப்பிட்டுக் கிழே உள்ள விலாசத்துக்கு அனுப்பவும்.

### சந்தா பழவம்

பெயர் : ..........................................................

முழு முகவரி : ..........................................................

..........................................................

தொலைபேசி எண். : ..........................................................

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 110/- | ☐ |
| மூன்று ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 360/- | ☐ |
| ஓர் ஆண்டு சந்தா (வெளிநாடு) | ரூ. 1000/- | ☐ |

**MAKKAL VISARANAI, Current A/C. 14920200000953, IFSC Code IOBA0001492, Indian Overseas Bank, K.K. Nagar Branch** என்ற வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி ரசீதை ஜெராக்ஸ் அனுப்பினால் போதுமானது.

மேலும் விபரங்களுக்கு

**மக்கள் விசாரணை** (மாத இதழ்)

எண். 7/13, பொன்மணச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.

**Email : writermouriyan@gmail.com** போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334



# உலகையே திரும்பிப் பார்க்க வைத்தார்

# ராஜமவுலி

பரபரப்பு பணிகளுக்கு இடையே சென்னை வந்திருந்த டைரக்டர் ராஜமவுலி அளித்த பேட்டி:

**பாகுபலி முதல் பாகத்தை முடிச்சிட்டு ரிலீசுக்கு காத்திருந்த நேரம், இப்போ 2வது பாகத்துக்கு காத்திருக்கிற நேரம்... ரெண்டுக்கும் வித்தியாசம் இருக்கா?**

கண்டிப்பா இருக்கு. பாகுபலிங்கிற ஒரு கனவை நிஜமாக்கிட்டு, அதை மக்கள் பார்வைக்காக கொண்டு வரும்போது, அதை அவங்க எப்படி ஏத்துக்குவாங்க. ஃபேண்டஸி கலந்த சரித்திர படத்தை ரசிகர்கள் எந்த பார்வையோடு பார்ப்பாங்க. இந்த கதை எனக்கு என்ன ஃபீல் தந்துச்சோ, அதே ஃபீல் ஸ்கிரீன்ல கொண்டு வந்துட்டேன். மக்களுக்கும் அந்த ஃபீலை படம் கொடுக்குமான்னு ஏகப்பட்ட கேள்விகளோடு முதல் பாகம் ரிலீசப்போ காத்திருந்தேன்.

எங்க டீமோட உழைப்பு வீண் போகாதுங்கிற நம்பிக்கை இருந்துச்சு. அதுக்கு பலன் பல மடங்கு கிடைச்சதுன்னே சொல்லலாம். தமிழ், தெலுங்கு ஆடியன்சையும் தாண்டி நாடு முழுக்க ரசிகர்கள் படத்தை தூக்கி பிடிச்சிக்கிட்டாங்க. இது நான் எதிர்பார்க்காதது. இப்போ ரெண்டாவது பாகம் வெளிவரும்போது ஒரே எண்ணம்தான் இருக்கு. எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யணும். முதல் பாகம் அளவுக்கு பதற்றம் இல்லை. ஆனா, முதல் பாகத்தைவிட இது மக்களுக்கு பிடிக்கணும்கிற வேண்டுதல் இருக்கு.

**முதல் பாகத்துலேருந்து இரண்டாவது பாகம் படம் எந்த விதத்துல வேறுபட்டு இருக்கும்?**

முதல் பாகத்துல இதுதான் தீம்னு சொல்லியாச்சு. அதற்கான முடிச்சுகளும் இதுதான்னு காட்டியாச்சு. அதை அவிழ்க்கிறதுதான் 2வது பாகம். அதுதான் த்ரில்லிங்கா இருக்கும். முதல் பாகத்துல ஒவ்வொரு கேரக்டர்களை அறிமுகப்படுத்தி, அந்த கேரக்டர்கள் என்ன பண்ணுதுங்கிறதை மட்டும்தான் காட்டினோம். முதல் பாகம் படம் முடியும்போது, அதுக்குள்ள படம் முடிஞ்சிருச்சாங்கிற ஏக்கம் ரசிகர்களுக்கு இருந்துச்சு. அதையெல்லாம் போக்குற மாதிரி ரெண்டாவது பாகம் இருக்கும். சிம்பிளா சொல்லணும்னா, கதையே இப்போதான் பாஸ் ஆரம்பிக்கப்போகுது.

**பாகுபலியை கட்டப்பா ஏன் கொன்னாருங்கிற கேள்வியும் படத்தோட எதிர்பார்ப்பை அதிகமாக்கி இருக்கு. யாருக்காவது இந்த ரகசியத்தை நீங்க சொல்லி இருக்கீங்களா?**

கண்டிப்பா கிடையாதுங்க. சிலர்கிட்ட சொன்னதாக சொல்வதும் உண்மை கிடையாது. சோஷியல் மீடியால ரசிகர்கள் இந்த

கேள்வியை பெரிசாக்கிவிட்டாங்க. இது டாக் ஆஃப் த நேஷனா மாறும்னு நினைச்சு பார்க்கல. ரொம்ப சந்தோஷமா இருக்கு. இப்போ மீடியா, ரசிகர்கள், நண்பர்களுன்னு யாரை பார்த்தாலும் அந்த கேள்வியை மட்டும் விட்டுட்டு வேற கேளுங்கன்னு தான் முதல்ல சொல்றேன் (மீண்டும் சிரிக்கிறார்).

**இந்த படத்தை எடுக்க உங்களுக்கு இன்ஸ்பிரேஷனா இருந்த விஷயம் எது?**

அப்பா விஜயேந்திர பிரசாத் சொன்ன கதைதான். பாகுபலி கதையை எழுதிட்டு வந்து அப்பா சொன்னப்போ, சூப்பர் மேன் போல அபூர்வ சக்தி கொண்ட பாகுபலி, கண்ணாலேயே மிரட்டி ஆண்களுக்கு சிம்மசொப்பனமா விளங்குற சிவகாமி, ஒரு பக்கம் கணவனோட காதலையும் இன்னொரு பக்கம் மகனோட அன்பையும் மனசுல சுமந்துக்கிட்டு கண்கள்ல பழி வாங்குற வெறியோடு இருக்கிற தேவசேனா, தனக்குள்ள இருக்கிற பெண்மையை மறந்துட்டு தன்னோட இனத்துக்காக போராடுற வீராங்கனை அவந்திகா, அதிகாரம் ஆணவம் கொடூரத்தோட மொத்த உருவமான

பல்லாலத்தேவன்னு ஒவ்வொரு கேரக்டரை உள்வாங்கியபோதும் தண்ணீர்ல மூழ்கிற நேரத்துலேயும் குழந்தையை ஒரு கையால தாங்குற அந்த காட்சி, அம்மாவுக்காக மெகா சிவலிங்க சிலையை தூக்கி வர்ற அந்த நோரணைன்னு கதை கேட்கும்போதும் சிலிர்த்துப் போனேன். இந்த உணர்வை ஒவ்வொரு ரசிகனுக்குள்ளும் கொண்டு வரணும்னு அப்போவே முடிவு பண்ணிட்டேன். விஷுவலா அதை கொண்டு வர்றதுதான் எனக்கு முன்னாடி இருந்த பெரிய சவால். ஒட்டுமொத்த கதையில ஒரு ஃபயர் இருந்துச்சு. அதை ஸ்கிரின்ல 100 சதவீதம் கொண்டு வரணும்னு தீர்மானிச்சேன். அதுக்கு முழு பக்க பலமா இருந்தது என்னோட டீம். அவங்களுக்கு தலைவணங்குறேன்.

**மகதீரா, நான் ஈ, இப்போ பாகுபலின்னு எல்லா படத்துலேயும் மாஸ் அண்ட் கிளாஸ் ரெண்டு வித ஆடியன்சையும் ஈர்க்குறீங்க. இதுக்கான உங்க டெக்னிக் என்ன?**

ரொம்ப சிம்பிள். என்னோட டார்க்கெட் எல்லாமே மாஸ் ஆடியன்ஸ்தான். அது என்னோட முதல் படத்துலேருந்தே பார்க்கலாம். மாஸுக்கான ஒரு விஷயத்தை நம்புற விதத்துல லாஜிக்கா சொன்னா அதை கிளாஸ் ஆடியன்சும் ஏத்துக்குவாங்க. உதாரணத்துக்கு பாகுபலில வர்ற போர்க்காட்சிகள். மெகா போர்வையை போட்டு ஒரு கூட்டத்தையே அதுக்குள்ள சிக்க வைப்பார் பிரபாஸ். இது பக்கா மாஸ் காட்சி. ஆனா லாஜிக்கோடும் மூளைக்கு வேலை கொடுக்கிற மாதிரியும் இருந்ததால கிளாஸ் ஆடியன்ஸையும் ஈர்த்துச்சு. பக்கா மாஸ் விஷயத்தையும் நம்புற மாதிரி சொன்னாலே அது எல்லா வகை ரசிகர்களையும் சென்றடையும்னு நம்புறேன்.




**ஒரு படத்துக்கு ஒரு கதாசிரியருங்கிற சூழல்ல தான் நம்ம சினிமா இன்னமும் இயங்கிட்டு இருக்கு. ஹாலிவுட் மாதிரி ஒரு டீமா ஸ்கிரிப்ட் பண்ற நிலை வராதா?**

அங்கே ஸ்கிரிப்ட் மட்டும் கிடையாது. எல்லாத்துக்குமே டீம் இருக்கு. ஆர்ட் டைரக்‌ஷன்லேருந்து காஸ்டியூம், மேக்அப்னு ஒவ்வொரு டிபார்ட்மென்ட்லேயும் நாலஞ்சு பேர் ஒர்க் பண்றாங்க. இங்கே ஆர்ட்ல, காஸ்டியூம்ல ஒருத்தரே சிறப்பா பண்றதால நாம அது பற்றி கேள்வி கேட்கிறது கிடையாது. ஆனா, ஸ்கிரிப்ட்ல படங்கள் சொதப்பும்போது ஒரு டீம் இதுல ஒர்க் பண்ணினா நல்லா இருக்கும்னு நினைக்குறோம். அது சரியானதுதான். ஒரு சப்ஜெக்ட்ல நாலு பேரு ஒர்க் பண்ணும் போது, நாலு பேருக்கு அந்த சப்ஜெக்ட்ல நாலு விதமான புரிதல், ஐடியாக்கள் இருக்கும். அது எல்லாமே அந்த ஸ்கிரிப்ட்டை மெருகேத்த கிடைக்கிற போனஸ்தான். அந்த போனஸ்

தான் ஒரு நல்ல படத்தை சிறப்பான படமா பாத்தும். டெக்னாலஜி லெவல்ல நாம ஹாலி வுட்டை நெருங்கிட்டு வர்றோம். கண்டிப்பா ஸ்கிரிப்ட் விஷயத்துலேயும் மாற்றம் நடக்கும்.

**இனிமே கிராபிக்ஸ் இல்லாத படங்கள்ல ஒர்க் பண்ண விரும்புறேன்னு சமீபத்துல சொல்லி இருந்தீங்க. ஏன் அப்படி?**

பாகுபலி ரெண்டு பாகத்துக்கும் சேர்த்து கிராபிக்ஸுக்காக மட்டுமே ஒரு வருஷம் செலவிட்டு இருக்கோம். ஃபேன்டஸி படத்துல கிராபிக்ஸ் தவிர்க்க முடியாது. ஆனா, முடிஞ்சவரைக்கும் செயற்கைலேருந்து விலகி இருக்கணும்னு நினைக்கிறேன்.

**பாகுபலி பண்ணினதால இனிமே இதைவிட பெரிய படம்தான் தரணும்னு பிரஷர் ஏற்பட்டிருக்கா?**

அப்படி எதுவும் இல்லை. என்னைப் பொருத்தவரை, அது எல்லாம் நாம தீர்மானிக்கிறதுதான். பிலிம் மேக்கர் ஒருவட்டத்துக்குள்ள விழுந்துடக்கூடாது. எல்லாவிதமான படமும் பண்ண விரும்புறேன். மகதீரா மாதிரி பெரிய பட்ஜெட் படம் பண்ணிட்டுதான் நான் ஈ மாதிரி சின்ன பட்ஜெட் படமும் பண்ணினேன். பாகுபலிக்கு பிறகு என்னங்கிறது முடிவு பண்ணலை. அது நான் ஈ மாதிரி சின்ன பட்ஜெட் படமா கூட இருக்கலாம். ஆனா, கண்டிப்பா கிராபிக்ஸ் இல்லாத படமா இருக்கும்.

**தமிழ் நல்லா பேசுறீங்க. எப்போ கத்துக்கிட்டீங்க?**

பாகுபலியை தமிழ்லேயும் பண்ணணும்னு முடிவு பண்ணினப்போ தமிழ் டீச்சரை வச்சி கத்துக்கிட்டேன். படத்துல கும்பல்ல ஒரு துணை நடிகர் பேசுற சின்ன வசனமா இருந்தாலும் அதுக்கான அர்த்தம் எனக்கு புரியணும் கிறதுல உறுதியா இருந்தேன். அதுக்காக ஒவ்வொரு வரிக்கும் இதுக்கு என்ன அர்த்தம்னு மத்தவங்ககிட்ட கேட்க விரும்பல. நானே தமிழ் படிக்கவும் பேசவும் கத்துக்கிட்டு ஷூட்டிங்கிற்கு போனேன். பிரபாஸும் அப்படித்தான். அவருக்கு தமிழ் வரும். இருந்தாலும் அவரோட தமிழ் வசன உச்சரிப்பு சரியா இருக்கணும்னு ஷூட்டிங்கிற்கு முன்னாடி கிளாஸ் எடுத்தோம். சின்ன பையன் மாதிரி வந்து உட்கார்ந்துட்டு தமிழ் வசனங்களை மனப்பாடம் பண்ணிட்டு இருப்பார். படம் பெர்ஃபெக்டா வரணும்கிறதுக்குதான் எல்லாமே.

மிகவும் இனிதாக பேட்டியளித்தார் இயக்குநர் ராஜமவுலி


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : writermouriyan@gmail.com
போன் : 044 - 4354 2611, செல் : 93821 33334

ரீவைண்ட் ஜன்னல்.

# இந்தியாவை உலுக்கிய அரசியல் மரணங்கள்!

## தமிழ்நாட்டில் மர்ம மரணம் பல புதைக்கப்பட்டுள்ளது



சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற் பட்டவளாக இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். சீதை மீது சந்தேகம் எழுந்தவுடனே இராமபிரான் அவரைத் தீக்குளிக்கச் செய்தார். கணவன் கோவலன் அபாண்டமாக கொல்லப் பட்டதை கண்ணகி நிருபித்ததும், சந்தேகம் கொண்டு தீர்ப்பளித்த ஒரே காரணத்துக்காகத் தனக்குத் தானே மரண தண்டனை கொடுத்துக் கொண்டான் பாண்டியன் நெடுஞ்செழியன். இந்த நிகழ்வுகள் யாவும் ஆட்சியாளர்கள் மக்களுக்கு எந்த சந்தேகமும் ஏற்படாத வகையில் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளன.

ஆனால், இன்றைய அரசியல் சூழ்நிலையில், பல நிகழ்வுகள் சந்தேகத்தை மேலும் மேலும் கிளறிவிடுகின்றன. ஒரு சம்பவம் மட்டும் என்றாலும் ஏதோ நேர்ந்துவிட்டது என்று தோன்றும். ஆனால், தொடர்ந்து அடுத்தடுத்து ஒரே மாதிரியான மர்ம சம்பவங்கள் நேர்ந்தால், அத்தகைய அரசின் மீது மக்களுக்கு இருக்கும் கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் போய்விடும்.

நூற்றுக்கணக்கான கோப்புகளில் கையெழுத்து விட்டதாக தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே பழனிச்சாமி கூறியிருக்கிறார். திட்டங்கள் வேகமாக நடக்கின்றன என்றும் அமைச்சர்கள் கூறுகிறார்கள். ஆனால், மர்மமான பல சம்பவங்களுக்கு விடையே கிடைக்கவில்லை என்பதுடன், திடீர் திடீரென்று மர்ம சாவுகளும் தொடர்கின்றன.

ஜெயலலிதாவின் மரணம் குறித்து சிபிஐ விசாரணை கோரி ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் வலியுறுத்தி வரும்நிலையில், ஜெயலலிதாவின் ஓய்வு இல்லமான கொடநாடு பங்களாவில் காவலாளி திடீரென்று கொல்லப்படுகிறார். அது தொடர்பாக போலீசார் தேடி வரும் கார் டிரைவர் கனகராஜ் சாலை விபத்தில் இறக்கிறார். கொள்ளைச் சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்ட சயான் என்பவர் குடும்பத்துடன் விபத்தில் சிக்குகிறார்.

இப்படி திகில் சம்பவங்கள் தொடர்பாக வேகமாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பது கூட மர்மமாகவே இருக்கிறது. அரசியலும் மர்ம நிகழ்வுகளும் தொன்றுதொட்டு நடப்பதுதான் போலும். பலரது மரணங்கள் அப்படி இருப்பது ஜனநாயகத்தை ஒரு சிலர் தங்களது கைப்பாவையாகக் கொண்டு, குற்றச் செயல்களுக்குத் துணை போகிறார்களோ என்ற கவலையை அதிகரித்து வருகிறது.

1971ம் ஆண்டு மே மாதம் 24 ம் தேதி டெல்லியில் நடந்த சம்பவத்தில் இன்னும் மர்மம் விலகிவில்லை. நாடாளுமன்ற சாலையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் தலைமை காசாளர் வேத் பிரகாஷ் மல்ஹோத்ராவுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. "பிரதமர் அலுவலகத்திலிருந்து பேசுகிறோம். வங்கதேச



அறக்கட்டளை நிறுவனத்துக்காக ரூ. 60 லட்சம் பணத்தை அளிக்கும்படி பிரதமர் கேட்டுக்கொண்டார்" என்று யாரோ கூறியிருக்கிறார்கள். காசாளருக்கு லேசாக சந்தேகம் வந்ததும், "இது பிரமதரே பேசுகிறார்.." என்று மறுமுனையில் இருந்தவர் கூற, சில விநாடிகளில், அப்போதைய பிரதமரின் குரலைக் காசாளர் கேட்டார்.

அடுத்த கணம், அலறிப் புடைத்துக் கொண்டு ரூ. 60 லட்சத்தைத் தயார் செய்து பிரதமர் அலுவலகத்துக்கு விரைந்தார். அப்போதுதான் அது போலி அழைப்பு எனத் தெரியவந்தது. இத்தகவல் நாடு முழுவதும் செய்தியாளர்களுக்குத் தீயைப் போலப் பரவி விட்டது. அதை யடுத்து புலன் விசாரணை முடுக்கப்பட்டது.

பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து ரூ. 60 லட்சம் கொள்ளையடிக்கப்பட்டதாக, ருஸ்தும் சோரப் நகர்வாலா என்பவர் கைது செய்யப் பட்டார். அந்த நபர் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஏதோ கடனுதவி பெற அணுகினார். ஆனால், அவரது விண்ணப்பத்தை ஏற்காத வங்கி கடன் வழங்க வில்லை. அதனால், அவர் ஒரு பொதுத் தொலைபேசி நிலையத்திலிருந்து வங்கியின் மேலாளரை மோசடியாக அழைத்துப் பணம் பெற முயன்றார் என்று கூறப்பட்டது.

இது அரசியல் பிரச்சினையாக வெடித்தது. காரணம், பிரதமரின் பெயரைச் சொல்லி யார் வேண்டுமானாலும், அரசு வங்கியிலிருந்து பணம் எடுக்கலாம் என்ற அளவுக்கு நடைமுறை ஆனது குறித்து காரசாரமாக கேள்விகள் எழுந்தன. அத்துடன், பிரதமரே இதுபோல் அரசு வங்கியிலிருந்து இதற்கு முன் எத்தனை முறை பணம் எடுத்தாரோ என்றெல்லாம் சர்ச்சை கிளம்பியது.

இது தொடர்பாகப் புலன் விசாரணை நடத்திய டி.கே. காஷ்யப் என்ற அதிகாரி சாலை விபத்தில் இறந்தார். கைது செய்யப்பட்ட நகர்வாலா சிறையில் உயிரிழந்தார். நகர்வாலா, காஷ்யப் ஆகியோரது மரணங்கள் குறித்து சர்ச்சைகள் பல எழுந்தன. பின்னர் ஜனதா கட்சி ஆட்சி அமைத்ததும், இச்சம்பவம் குறித்து விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. இவ்வளவு ஓட்டைகள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைவதாக இது குறித்து அமைக்கப்பட்ட விசாரணை கமிஷன் தலைவர் நீதிபதி பி. ஜெகமோகன் ரெட்டி குறிப்பிட்டிருந்தார்.

இந்திரா காந்திக்கு நெருக்கமாக இருந்தவர் என்று கூறப்படும் துறவி தீரேந்திர பிரம்மச்சாரி. இவர் இந்திரா காந்திக்கு யோகாசனம் கற்றுத் தந்தவர். யோகாசனம், ஆன்மிகம் ஆகியவற்றில் மட்டும் ஈடுபட்டிருக்க வேண்டிய பிரம்மச்சாரி உலகின் பல நாடுகளில் பயணம் செய்தவர். அதே சமயம் சிவா துப்பாக்கித் தொழிற்சாலை என்ற ஆயுத உற்பத்தி ஆலையின் பங்குதாரராக இருந்தார். இது நாடு முழுவதும் பெரிய பிரச்சினையைக் கிளறியது.

அது மட்டுமின்றி இதுபோல் அவரது பெயரில் இருந்த பல சொத்துகள் சட்ட விரோதமானவை என்றும் கண்டறியப்பட்டது. ரஷியாவில் ரஸ்புடின் என்ற துறவியைப் போல இவரும் சித்திரிக்கப்பட்டார். ஆனால், இவர் ஜம்மு பகுதியில் பயணம் செய்து கொண்டிருந்த தனியார் விமானம் விபத்தில் சிக்கியதால், மர்மான முறையில் இறந்தார்.

தமிழகத்தை உலுக்கிய ஒரு மரணம் அண்ணா நகர் ரமேஷ் என்ற கட்டட காண்ட்ராக்டர் தனது குடும்பத்தினருடன் விஷமருந்தி இறந்தது. இச்சம்பவம் 2001 ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு, ரமேஷ் குடும்பத்தினரின் சாவுக்கு

போலீசார் சித்திரவதையே காரணம் என்று திமுகவினர் கடுமையாகச் சாடினர். ஆனால், அது தற்கொலை அல்ல, கொலை என்று ஜெயலலிதா சட்டப் பேரவையிலேயே கூறினார். ரமேஷின் மரணத்தின் பின்னணியில் திமுகவினர் நெருக்கடி கொடுத்திருக்கலாம் என்று கூறினர்.

ரமேஷ் அப்போது மேயராக இருந்த மு.க. ஸ்டாலினுக்கு நெருக்கமானவர். சென்னையில் மேம்பாலங்களைக் கட்டியதில் பல கோடி நஷ்டம் மாநகராட்சிக்கு ஏற்பட மு.க. ஸ்டாலின் காரணமாக இருந்தார் என்று ஜெயலலிதா அரசு குற்றம் சாட்டியது. இதனிடையில் டிஜி தெய்வசிகாமணி என்ற காண்ட்ராக்டர் தனக்கு அரசு காண்ட்ராக்ட் கிடைப்பதற்காக ரமேஷ் மூலமாக மேயர் மு.க. ஸ்டாலின், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் தா. கிருட்டிணன் ஆகியோருக்கு ரூ. 7 கோடி கமிஷன் கொடுத்ததாக போலீசில் புகார் கொடுத்தார். அதையடுத்து, ரமேஷ் கைது செய்யப்படலாம் என்று பேசப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து, **2001**ம் ஆண்டு ஜூலை **16**ம் தேதி ரமேஷ், அவரது மனைவி காஞ்சனா, மூன்று மகள்கள் விஷமருந்தி இறந்து கிடந்தனர். அவரது தற்கொலைக் குறிப்பில், தான் குற்றமில்லாதவன் என்றும், போலீசார் நெருக்கடி கொடுத்து வருவதாகவும் புகார் கூறியிருந்தார். சமூகத்தில் தனக்கிருக்கும் பெயருக்கு களங்கம் ஏற்படுமே என்ற கவலையிலும், போலீசார் சித்திரவதை செய்வதாலும் உயிரை மாய்த்துக் கொள்வதாக அவரது தற்கொலைக் கடிதத்தில் கூறப்பட்டது. அக்கடிதத்தை அவரே எழுதினாரா என்பது தெரியவில்லை.

ரமேஷ் தற்கொலை செய்துகொண்டாரா, அவரது மரணத்தில் ஏதாவது மர்மம் இருக்கிறதா, அரசு காண்ட்ராக்ட் தொடர்பாக அவர் மூலமாகப் பணம் கொடுத்தாக தெய்வசிகாமணி கூறியதன் பின்னணி என்ன என்ற மர்மங்கள் இன்னும் விலகவில்லை.

நாட்டையே உலுக்கிய 2 ஜி அலைக்கற்றை விவகாரத்தில் பெரிய மர்மம் இன்றும் விடுபடவில்லை. அதுதான் சாதிக் பாஷா என்ற ரியல் எஸ்டேட் தொழிலதிபரின் மரணம். அவரும் தற்கொலை செய்துகொண்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாதிக் பாஷா 2 ஜி அலைக்கற்றை ஊழல் தொடர்பாக விசாரிக்கப்பட்டுவரும் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ. ராசாவின் நண்பர் ஆவார். சாதிக் பாட்சா கிரீன் ஹவுஸ் புரமோட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தை நடத்திவந்தார். ஆ. ராசாவின்



சகோதரர் கலியபெருமாள் என்பவர் கிரீன் ஹவுஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக இருந்தார். ராசா மத்தியில் அமைச்சர் ஆனதை அடுத்து, இவரது தொழில் வேகமாக அபிவிருத்தி அடைந்தது.

நீடிக்கும் மர்மம் 2 ஜி வழக்கை விசாரித்து வரும் புலன்விசாரணை அதிகாரிகளுக்கு சாதிக் பாட்சா மீதும் கண் இருந்தது என்று கூறப்படுவதுண்டு. 2ஜி மூலம் கிடைத்த பணத்தை ஆ. ராசா கிரீன் ஹவுஸ் நிறுவனத்தில் போட்டு வைத்திருந்தார் என்றும் கூறப்படுவதுண்டு. இந்நிலையில், **2011**ம் ஆண்டு மார்ச் **16**ம் தேதி சாதிக் பாட்சா தனது இல்லத்தில் தூக்கிலிட்டு இறந்து கிடந்தார். அத்துடன், 2ஜி அலைக்கற்றை ஏலத்தில் மிகவும் ஆதாயம் பெற்ற ஸ்வான் டெலிகாம் நிறுவனத்தின் பங்குதாரராக கிரீன்ஹவுஸ் புரமோட்டர் நிறுவனம் இடம்பெற்றிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் சாதிக் பாட்சாவின் மரணம் பல மர்மங்களுக்கு மடிச்சு போட்டிருக்கிறது. இவரது மரணம் தற்கொலையா இல்லையா என்பது இன்று வரையில் தெரியவில்லை.

**– மவுரியன்**



## மூளப் போகுது உலகப்போர்..!

# சிவன் மலை ஆண்டவன் உத்தரவால் பரபரப்பு.!!

திருப்பூரை அடுத்த சிவன்மலை சுப்ரமணிய சுவாமி கோவில் ஆண்டவன் உத்தரவு பெட்டியில் உலக உருண்டை வைத்து பூஜை செய்யப்படுவதால் உலகப் போர் மூளலாம் என பரபரப்பு ஏற்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே உள்ளது பழமைவாய்ந்த சிவன்மலை சுப்ரமணிய சுவாமி கோவில்.

எந்த கோவிலிலும் இல்லாத சிறப்பாக ஆண்டவர் உத்தரவு பெட்டி இங்கு வைக்கப் பட்டுள்ளது. இந்த உத்தரவு பெட்டியில் பக்தர் கனவில் தோன்றி ஆண்டவர் குறிப்பிடும் பொருள் வைத்து பூஜிக்கப்படும். உலகநிகழ்வை குறிப்பால் உணர்த்துவதற்காக ஆண்டவன் இடும் கட்டளையே இந்த பொருட்களை வைத்து வழிபடுவதற்கான காரணமாகக் கூறப்படுகிறது.




பக்தரின் கனவில் தோன்றும் பொருள் குறித்து குருக்கள்கள், சாமி சன்னிதியில் வைத்து குறி கேட்டு சுவாமி உத்தரவு அளிக்கும் பட்சத்தில் அந்தப் பொருள் கண்ணாடி பேழையில் வைக்கப்படும். அப்படி வைக்கப்பட்ட அந்த பொருள் பல்வேறு வடிவங்களில் ஆக்கமும், அழிவும் நிகழ்த்தியுள்ளதாக



பக்தர்களின் ஐதீகம்.

ஆண்டவன் உத்தரவு பெட்டியில், இதற்கு முன்பு தங்கம், ரூபாய் நோட்டு, ஆற்று மணல், தண்ணீர், உப்பு, ஏர் கலப்பை, துப்பாக்கி, இரும்பு சங்கிலி உள்பட 100-க்கும் மேற்பட்ட பொருட்கள் வைத்து பூஜை செய்யப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுப் பெட்டியில் வைக்கும் பொருள்களுக்கு ஏற்ப தமிழக அரசியல் நடவடிக்கைகளும் அரங்கேறி வருவதால் ஒவ்வொரு முறையும் ஆண்டவன் உத்தரவு பெட்டியில் வைக்கப்படும் பொருட்கள் அனைவராலும் உற்று நோக்கப்படுகிறது.



வில்வ இலையால் வந்த திருப்பம் ஏப்ரல் மாத தொடக்கத்தில் வில்வ இலையுடன் 108 ருத்ராட்சம் வைத்து கட்டி ஆண்டவன் உத்தரவு பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தது. ஆண்டவன் உத்தரவு பெட்டியில் ருத்ராட்சம் வைத்ததால் பல்வேறு அரசியல் மாற்றங்கள் வரும் என சொல்லப்பட்டது அதேபோலவே அதிமுக பல திருப்பங்களை சந்தித்ததை நினைவு கூர்கின்றனர்.

அரிசி வைத்த போது அரிசி விலை கடுமையாக உயர்ந்ததாகவும், தண்ணீர் வைத்தபோது சுனாமி வந்ததாகவும் கூறப்படுகிறது. கடந்த பிப்ரவரி மாதம் உத்தரவு பெட்டியில் இரும்பு சங்கிலி வைத்ததால் சசிகலா உள்ளிட்டோர் சிறைக்கு சென்ற தாகவும் பல்வேறு சம்பவங்களை பக்தர்களும் பொதுமக்களும் அதிர்ச்சியோடு பார்க்கின்றனர்.

கடந்த ஏப்ரல் 21ந்தேதி வலம்புரி சங்கு வைத்து வழிபட்ட நிலையில் ஆண்டவர் உத்தரவு பெட்டியில் உலக உருண்டை வைக்கப்பட்டுள்ளது. இதனால் உலகத்திற்கு பேரழிவு ஏற்படுவதற்கான அபாயம் ஏற்படுமாம். இதனால் உள்நாட்டு சண்டை, அண்டை நாடுகளிடையே போர் மூலம் உலகின் பல பகுதிகள் அழியும் சூழல் உருவாகும் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

**எல்லையில் ராணவ வீரர்களின் தலை துண்டிக்கப்பட்ட விவகாரம் பற்றி எறிவதால் இந்தியா பாகிஸ்தான் இடையே போர் மூளுமா ? என்றும் சிலர் தங்களது அச்சத்தை வெளிப்படுத்துகின்றனர்.**

– கனகதுர்கா

# கருநிற காக்கிகள்

10

ஆ.மவுரியன்

**சிறு குழந்தைகள் எல்லாம் விரும்பி சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து கடுங்கோபம் கொண்டான் தமிழரசு.**

பரபரப்பான சூழ்நிலையில் ராஜசேகரைப் பற்றி சமூக ஊடகங்களில் கௌரி அடித்த காட்சிகள் வைரலாக பரவிக் கொண்டிருந்தது. சேனல் அதிபருக்கும் அது தெரிய வர அதிர்ச்சிக்குள்ளானார். அவரை சார்ந்த அத்தனை தொழில் அதிபர்கள், நண்பர்கள், உறவினர்கள் என கேள்வியாய் கேட்டுத் தொலைத்தார்கள். ஒரு வழியாக தாண்டவனும் முடிவுக்கு வந்தார்.

சென்னை நகர கமிஷனர் சுதீப் தண்வீர்க்கு போன் செய்தார். இத பார் கமிஷனர், ஆன்லைனில் உனக்கு அக்கவுண்டுக்கு 50-L டிரான்சர் பன்றேன். அந்த பத்திரிகைகாரன் இனிமே உயிரோட இருக்கக்கூடாது. நீ என்ன பண்ணுவியோ ஏது பண்ணுவியோ இன்னும் டு டேய்ஸ்ல அவன் டெத்நியுஸ நான் பத்திரிகையில பாக்கணும் என்று கண்டிப்பான குரலில் பேசினார், கமிஷனர் சூறுக்கிட்டு சார் ராஜசேகரைப் பற்றி உங்களுக்குத் முழுசா தெரியாதுனு நினைக்கிறேன். அவன் உங்கள மாதிரி நூறு பேருக்கு சமம் சார், அவன சாதாரணமா எடுத்துக்காதீங்க, எதையும் கொஞ்சம் யோசிச்சு செய்யுங்க.

மிஸ்டர் கமிஷனர், அவன் என் கால் தூசுக் குசமம், அவன் ஒரு சாதாரண ரிப்போட்டர், உன்னால முடியலனா சொல்லுங்க, நானே பாத்துக்கிறேன், சாரி சார் நான் பாத்துக்கிறேன் என்று கடுப்புடன் போனை ஆப் செய்தார் கமிஷனர்.

திருநெல்வேலி பார்த்தசாரதி கோவில் அருகில் திவ்யாவுடன் ராஜசேகர் பேசிக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு வந்த கமிஷனர் ராஜசேகரை ஜீப்பில் ஏறுமாறு அழைத்தார், ராஜசேகர் பதில் ஏதும் பேசாமல் ஜீப்பில் ஏறினான். ஜீப் கடற்கரை சாலை வழியாக சென்று ஒரு ரிசார்ட்டில் நின்றது. கமிஷனர் ராஜசேகரை கீழே இறங்கச் சொல்லி உத்தரவு போட்டான்.

கமிஷனர் சார் என்னஎதுக்கு இவ்வளவு தூரம் அழைச்சிட்டு வந்தீங்க என்று ராஜசேகர் கேட்க, அவசியம் தெரிஞ்சிக்கனுமா? எஸ், மிஸ்டர் கமிஷனர் ஒரு பத்திரிகையாளரை காரணம் காரணமில்லாம இப்படி அழைச்சிட்டு வருவது சட்டப்படி குற்றம்.

சட்டத்தைப் பற்றி என்கிட்டேயே பேசறியா உன்ன என்ன செய்றேன் பார். மிஸ்டர் கமிஷனர் கொஞ்சம் கோவத்த குறைச்சிக்குங்க, நீங்க எதுக்காக என்ன அழைச்சிட்டு வந்திங்க, யார் சொல்லி இப்படி செய்றீங்கன்னு நான் சொல்லட்டுமா? யார் சொல்லியும் நான் செய்யல, ஒரு சின்ன என்கொய்ரி விஷயமா? உன்ன இங்க அழைச்சிட்டு வந்திருக்கேன், அது என்னன்னா? உங்க மொபைல் பாருங்க, அத நான் உங்களுக்கு அனுப்பியிருக்கேன், பாருங்க, கமிஷனர் தனது வாட்ஸ் ஆப்பை ஆன் செய்து பார்க்க

அதிர்ச்சி ஆனார். கமிஷனரும் தாண்டவனும் பேசிய உரையாடல்கள் ஆடியோ அதில் இருந்தது. ஆக்ஸிஸ் பேங்க் மூலமாக டிரான்சர் ஆன 50 லட்சம். ஆன்லைன் ரெசிப்ட் இருந்தது. பார்த்து பதறிப்போய் விட்டார்.



கமிஷனர் தனது தலை தொங்கிபோனார். ராஜசேகர் ஏளனமாய் சிரித்தான். மிஸ்டர் கமிஷனர் நீங்க நினைக்கிற மாதிரி நான் ஒரு புத்திசாலி கிடையாது. வடிகட்டன முட்டான் ரிப்போர்ட்டர்தான். அதனாலதான் உடனுக்குடன் ஆதாரங்களை சேகரிக்க முடிஞ் சது. இப்ப இத சேனலுக்கு குறிப்பா தாண்ட வன் சேனலைத் தவிர மத்த சேனல்களுக்கு அனுப்பினா போதும் உங்க உடுப்பு கழண்டு டும், கழட்டட்டுமா? இத பாரு போலீஸ் உங்க ரேஞ்சுக்கு ரொம் கீழ இறங்கி கெஞ்ச வேண் டாம், உங்க கடமையை நீங்க செய்யுங்க.

ப்ளீஸ் ராஜசேகர் நீங்க, முட்டான்னு அடிக்கடி சொல்லாதீங்க, செய்யுறது எல்லாம் வெறிக் கிளவரா இருக்கு நாங்க பேசி அரை மணிநேரம் கூட இருக்காது அதுக்குள்ள இவ்வளவு ஆதாரத்தையும் சேகரிச்சிங்களா? எவ்வளவு பெரிய புத்தி சாலியா? இருக்கனும் என்று சொல்ல ராஜசேகர். சிரித்துவிட்டு இதுக்கே இப்படி சொன்னா? நீங்க பண்ண அத்தனை இல்லீகளுக்கும் எங்கிட்ட வலுவான ஆதாரம் இருக்கு? சொல்லட்டுமா? வேண்டாம் ப்ளீஸ் ராஜசேகர் நான் என்ன செய்யனும், அப்படி வாங்க வழிக்கு.

இத பார் போலீஸ் தாண்டவன் சொன்ன மாதிரி என்ன கூட்டிட்டு போயி 10 முரட்டு போலிஸை வச்சி தோல உறிக்கனும் அத வீடியோவா எடுத்து மொபைல் மூலமா தாண்டவனுக்கு அனுப்புங்க அப்பதான் உங்க மேலே சந்தேகம் வராது? ராஜசேகர் நான் அப்படி உங்கள செய்ய முடியாது? யோவ் புத்தி சாலியா திங் பண்றேன் சொல்லிட்டு முட் டாளா? திங் பண்ணாத. நான் சொல்றத செய் நீ செய்யலனா உனக்கு வேல போயிடும். எனக்கு உயிர் போயிடும், என்ன சொல்றீங்க ராஜசேகர் ஆமாம் நீ செய்லன்னா? மிகப் பெரிய கேங்ஸ்டார வச்சி என் கதையை முடிச் சிடுவான். உன்ன மத்த போலீஸ்காரன் விட்டு கண்டெய்னர்ல மோதவிட்டு உன்னையும் தூக்கிடுவான், இனிமே நான் சொல்ற மாதிரி செய், ஓகே சார், வெரிகுட் பிளான் சினிமா ஸ்டண்ட் ஜிம் பாய்ஸ அஞ்சு பேர வரவச்சு டம்மி உருட்டு கட்டையை கொடுத்து யூனிப் பார்ம்ல வரச்சொல்லி ஒரு குடோன்ல வச்சி என்ன அடிக்க சொல்லுங்க அத வீடியோ வா அனுப்புங்க அவன் சந்தோஷத்தில் இன்னும் உனக்கு ஐம்பது லட்சம் தருவான் வாங்கிக்கோ, நான் மட்டும் தாண்டவன் பொண்ண லவ் பண்ண வச்சிட்டேன்னா உனக்கு 100 கோடி தரேன் செட்டிலாயிடு அதுகப்புறம் இந்த டார்ச்சர் புடிச்சா வேல உனக்கு வேணாம். உன் பொண்ணாட்டி, புள்ளையங்களோட சந்தோஷமா இருங்க, என்ன புரியுதா? என்றான் ராஜசேகர், கமிஷனர் அடுத்த கட்டத் திட்டத்திற்கு போன் செய்து கொண்டிருந்தார்.

ஓட்டல் ஓனர் தமிழரசுவின் அருகில் வந்து கோவமாக என்ன சார் உங்க ப்ராப்ளம் நான் தான் சார் ஓனர் சொல்லுங்க என்றான், ப்ளீஸ் உங்க கூட தனியா பேசனும் நான் ஹெல்த் டிபார்ட்மெண்ட்ல இருந்து வரேனென்று தனது ஏ.டி.எம். கார்டுகாட்டி உடனேபாக்கெட் டில் வைத்துக் கொண்டான், உங்க செப்டிக் டேங் எவ்வளவு ஆழத்தில் இருக்கும் சுமார் முப்பது அடி இருக்கும். அத ஓப்பன் பண்ணி எவ்ளவு நாள் இருக்கும், சுமார் இரண்டு வருஷம் இருக்கும் அப்படினா? அத நான் பார்க் கலாமா? ஒஎஸ் பளீஸ் வாங்க என்று ஓட்டல் பின்புறத்திற்கு அழைத்துச் சென்று திறந்து காட்ட அந்த ஓட்டல் ஓனரை அந்த தொட்டி யில் தள்ளிவிட்டு மூடியை மூடினான் தமிழரசு.

- தொடரும்

# யாருக்கு நஷ்டம்..?

ஆயிரம் தொழில்களில்
ஆர்வம் கொண்டோம்
சோறு போடும் தொழிலை
மறந்து போனோம் ....

சேற்றில் கால் வைக்காவிட்டால்
சோற்றுக்கு வழியேது?
கணிப்பொறிகள் வந்ததும்
கழனிகளை மறந்துவிட்டோம்...

ஐ-பாட், ஆண்ட்ராய்டு வந்ததும்
உழைக்காமல் இருந்துவிட்டோம்

நிலங்கள் வீடு ஆயின ...
களங்கள் காடு ஆயின ...

விவசாயி விண்ணோடு போகிறான்...
விவசாயம் மண்ணோடு போனது...

சில இடத்தில் விவசாயம் இல்லை...
பல இடத்தில் கிராமமே இல்லை...

விவசாயத்தை துறந்த நாடும்...
விவசாயியை மறந்த நாடும்
வல்லரசாக முடியாது
இது யாருக்கு நஷ்டம்..?

- கவிஞர் **நிவேதிதா**




கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3 Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S Ali Mohammad Syeed at J M Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor : A. Mouriyan.



The jungle hides a girl who cannot die.
விரைவில்
வெளியீடு
ORIGIN
30 வயது மதிக்கத்தக்க ஒருவன்
A. MOURIYAN NOVEL

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

